Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

Tilko Jaffna City Hotel
❖ Banquet Hall
❖ Conference Hall
❖ Restaurant ❖ Luxurious rooms
❖ Swimming Pool
❖ Gymnasium/Spa
70/6, K.K.S Road, Jaffna.
E-Mail - tilkojaffna@gmail.com
Web - www.Cityhoteljaffna.com
T.P - 0212225969
Hotline: 0212229497
(C/2967)

முரசு – 03 திருவள்ளுவர் ஆண்டு 2044 ஆவணி 03 திங்கட்கிழமை (19.08.2013) பக்கங்கள் 20 ஓசை – 323

# நவிப்பிள்ளையின் விஜயம் உண்மை நிலை தெளிவாகும்

## நம்பிக்கை கொள்கிறது அரசு



(கொழும்பு)

இலங்கைக்கு எதிர்வரும் 25 ஆம் திகதி வருகை தரவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவிப்பிள்ளை இறுதி யுத்தம் இடம்பெற்ற வடபகுதிக்கு செல்வதற்கான விசேட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளதாகவும் இந்த விஜயத்தின் மூலம் அவர் இலங்கை தொடர்பான உண்மை நிலையை அறிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் எனவும் அரசாங்கம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்துள்ளதாவது,

நவிப்பிள்ளை கேட்டுக்கொண்டதன்படி, அவருக்கான அனைத்து வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. அவர் தனது விஜயத்தினை அடுத்து இலங்கையின் தற்போதைய நிலைமை தொடர்பாக தெளிவான புரிந்துணர்வை கொண்டிருப்பாரென நாம் நம்புகிறோம்.

இறுதி யுத்தம் முடிவடைந்த பின்னர் வேண்டாத சில குழுவினர் தவறான தகவல்களை நவிப்பிள்ளைக்கு அளித்துள்ளனர். எனினும் அவர் தனது விஜயத்தின்போது பொதுமக்கள், பொது அமைப்புக்கள் மற்றும் அரசாங்கத்திடமிருந்து பெறும் தகவல்களின் மூலம் இலங்கையின் உண்மை நிலையை அறிந்துகொள்ள முடியும்.

இறுதிக்கட்டப் போரின்போது காணாமற் போனவர்கள் தொடர்பாகவும், வடபகுதி காணி சுவீகரிப்புக் குறித்தும் நவிப்பிள்ளை தனிப்பட்ட ரீதியான விசாரணைகளை மேற்கொள்வதற்கு விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நவிப் பிள்ளையிடம் நாம் வினயமாகக் கேட்பது என்னவெனில்

19 ஆம் பக்கம் பார்க்க

## அபிவிருத்தி வேலைத்திட்டத்தில் வேட்பாளர்கள் ஈடுபடக்கூடாது

### அமைச்சர் சுசில் கண்டிப்பான உத்தரவு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் வடக்கில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் ஈடுபட்டால் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சுசில் பிரேம ஜெயந்த தெரிவித்துள்ளார்.

நேற்றுப் பிற்பகல் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அருகாமையில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேர்தல் கால தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்

19 ஆம் பக்கம் பார்க்க

## தென்பகுதி தொழிலாளி கொலை; யாழில் தம்பதியர் கைது

யாழ். பொலிஸ் நிலையத்திற்கென நிர்மாணிக்கப்பட்டு வரும் கட்டடத் தொகுதியில் வேலைபார்த்து வந்த தென்பகுதியைச் சேர்ந்த தொழிலாளி ஒருவரை அடித்துக் கொலை செய்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதியரை கைது செய்துள்ளதாக யாழ். சிறு குற்றத் தடுப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ.டபிள்யு எல்.விக்கிரமராச்சி தெரிவித்தார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## நெடுந்தீவு தாக்குதல் சம்பவம் வன்மையாக கண்டிக்கிறது ஈ.பி.டி.பி.

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தாக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்திகள் ஈ.பி.டி.பி. மீது சேறு பூசும் நோக்கம் கொண்டதாகும். இந்தத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது.

நெடுந்தீவில் கூட்டமைப்பு வேட்பாளர்கள் தாக்கப்பட்டதாக வெளியான செய்திகள் தொடர்பில் ஈழமக்கள் ஜனநாயகக்

19 ஆம் பக்கம் பார்க்க

## கொமன்வெல்த்தில் பங்கேற்பு பிரதமர் நல்லமுடிவு எடுப்பார்

### என்கிறார் அமைச்சர் நாராயணசாமி

இலங்கையில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்பது தொடர்பாக தமிழக கட்சிகளின் கோரிக்கையை பிரதமர் கனிவுடன் பரிசீலித்து நல்ல முடிவு எடுப்பார் என்று மத்திய இணையமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார். இது தொடர்பாக அவர், செய்தியாளர்களிடம் கூறியதாவது,

19 ஆம் பக்கம் பார்க்க

## போர்க்குற்ற ஆதாரங்களை சமர்ப்பிக்க வேண்டும் ஐ.நா.

### கேட்கிறார் கோத்தா

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் 40 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், காணாமற்போனதாகவும், சுமத்தப்படும் போர்க்குற்றச்சாட்டுகளுக்குரிய ஆதாரங்களைச் சமர்ப்பிக்குமாறு, பாதுகாப்புச்செயலர் கோத்தாபய ராஜபக்ஷ ஐ.நா.வை கேட்டுள்ளார். படையினர் மீது போர்க்குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் ஐ.நா.வும் ஏனைய தரப்பினரும் அதற்கான அடிப்படை ஆதாரங்களை வெளிப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தமாத இறுதியில் இலங்கைக்கு வருகைதரவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையிடம், அரசாங்கம் இந்த விவகாரம் குறித்து பிரச்சினை எழுப்பவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

03



பணமே துறி...

06



கதி என்ன?

11, 12



கலாசாரக் கந்தன்

## வடமாகாண அபிவிருத்தி திட்டமிடல் குழு அமைப்பு



வடக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கான திட்டத்தை தயாரிப்பதற்கான திட்டமிடல் குழுவொன்றை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. வடக்கு மாகாணத்தின் நிர்வாக மையமாக மாங்குளத்தையும், கலாசார மையமாக யாழ்ப்பாணத்தையும், வர்த்தக மையமாக கிளிநொச்சியையும், துறைமுக நகராக மன்னாரையும் அபிவிருத்தி செய்யும் வகையில், திட்டங்களை வகுப்பதற்காகவே வடக்கு மாகாண தேசிய பௌதிக திட்டமிடல் குழு அமைக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லவில் உள்ள நகர அபிவிருத்தி அமைச்சின் செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை, நடந்த கூட்டத்திலேயே இந்தக் குழு ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அமைச்சர் வீமல் வீரவன்ச, வடக்கு மாகாண ஆளுநர்

19 ஆம் பக்கம் பார்க்க

## திருமலையில் சூடு 2 விமானப்படையினர் பலி

திருகோணமலையில் விமானப்படை அதிகாரி ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில விமானப்படையினர் இருவர் உயிரிழந்தனர். திருகோணமலை மாபிள் பீச் பகுதியில் உள்ள விமானப்படையின் விருந்தினர் விடுதியிலேயே நேற்றுக் காலை இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

விமானப்படையைச் சேர்ந்த கோப்ரல் தர அதிகாரி, அந்த விடுதியில் வரவேற்பாளராகப் பணியாற்றும், பெண் சிப்பாய் ஒருவரையும், மற்றொரு விமானப்படைச் சிப்பாயையும் துப்பாக்கியால் சுட்டார். இதையடுத்து குறிப்பிட்ட கோப்ரல் தர அதிகாரி தன்னைத்

19 ஆம் பக்கம் பார்க்க

5ஆம் பக்கத்தில் சிறப்பு நேர்காணல்



# சந்தோசத்திலும், துக்கத்திலும் மக்களுடன் வாழ்பவர்கள் நாம்



நாங்கள் வடமாகாண மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டவர்களோ, இறக்குமதி செய்யப்பட்டவர்களோ இல்லை. மாறாக உங்களுடனேயே இருப்பவர்கள். சந்தோசங்களிலும், துக்கத்திலும் உங்களுடனேயே வாழ்பவர்கள்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடும் ஈழமக்கள் ஜனநாயகக்கட்சியின் முதன்மை வேட்பாளர் எஸ். தவராசா தெரிவித்துள்ளார்.

வலி.வடக்கு குட்டியபுலம் கிராமத்தில் நேற்று முன்தினம் மக்களைச் சந்தித்து உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசியம் என்றும், தன்மானம் என்றும் உசுப்பேற்றி உங்கள் வாக்குகளை அபகரித்துவிட்டு ஓடிப்போனவர்களில்லை. இந்த மாவட்டத்திலேயே தங்கியிருந்து உங்கள் குறை தீர்ப்பவர்கள்.

ஈ.பி.டி.பி.யின் வெற்றி எப்போதும் தமிழ் மக்களின் வெற்றியாகவே எம்மால் செயல் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே நீங்கள் வெற்றிபெற எமக்கே வாக்களிக்க வேண்டும்.

வடக்கு மாகாணசபையை செயற்றிறன் மிக்கதாக நிர்வகிப்பதன் ஊடாகவே வட மாகாணத்தில் மீள் எழுச்சியை இன்னும் சிறப்பாக கட்டியெழுப்ப முடியும்.

வடக்கு மாகாண சபையை வெற்றிகொண்டு அந்த வெற்றியை சர்வதேசங்களின் காலடியில் சமர்ப்பித்து மண்டியிடப்போவதாக கூட்டமைப்பினர் கூறுகின்றனர்.

அதனால் துயரங்கள் சுமந்து இங்கே வாழ்ந்துகொண்டிருக்கும் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் ஏற்படப்போவதில்லை. சர்வதேசத்திற்கு காட்டுவதற்கு இவர்கள் வெற்றிபெற்ற 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்ற பலம் போதவில்லையா? பின்னர் கிடைத்திருக்கும் 13 நாடாளுமன்ற உறுப்பினர் என்ற பலம் போதவில்லையா, 15 இற்கும் மேற்பட்ட உள்ளூராட்சி சபைகளை முடக்கிப்போட்டு இருக்கின்றார்களே. அதுவும் போதாதா? என்று கேட்க விரும்புகின்றேன். தொடர்ந்தும் தமிழ் மக்களை ஏமாற்ற இவர்கள் கங்கணம் கட்டி நிற்கின்றார்கள்.

எமது அன்பான உறவுகளே, நீங்கள் ஏமாளிகளும் அல்ல தோற்றுப்போனவர்களும் அல்ல. வாழப்பிறந்தவர்கள். நீங்கள் வாழ்வதற்காகவும், நமது நாளைய சந்ததிகள் மகிழ்ச்சியோடு வாழ்வதற்காக வாக்களியுங்கள்.

காற்றில் பறக்கவிடப்படும் பொய் வாக்குறுதிகளை நாங்கள் உங்களுக்கு ஒருபோதும் கொடுத்ததில்லை. அன்பான உறவுகளே, உங்கள் பகுதியில் நிறையவே தேவைகள் இருப்பதை நாங்கள் அறிவோம். அன்றாடத் தேவைகளுக்காகவும் அடிப்படைத்தேவைகளுக்காகவும் நீங்கள் ஏங்கிக்கெண்டு இருக்கின்றீர்கள். இங்கே வீதிகள், பொது வசதிகள், கல்வி, சுகாதாரம் தொடர்பான முக்கியமான தேவைகள் உடனடியாக தீர்க்க வேண்டியுள்ளதை நாம் அறிவோம். எமது கல்வி, சுகாதாரம், தொடர்பான முக்கியமான தேவைகள் உடனடியாக தீர்க்க வேண்டியுள்ளதை நாம் அறிவோம். எமது கவனம் நிச்சயமாக உங்களின் தேவைகளை தீர்த்துவைத்து உங்களின் பகுதியை மேம்படுத்துவதில் இருக்கும். உங்களுக்காகச் சேவைசெய்யும் எங்களின் கரங்களை பலப்படுத்துங்கள்.

எங்களை இந்த வடக்கு மாகாண சபைத் தேர்தலில் அமோகமாக வெற்றிபெறச் செய்யுங்கள். ஈ.பி.டி.பி.யின் வெற்றி மக்களின் வெற்றியாகட்டும் என்றும் கூறினார்.

## நல்லூர் உற்சவத்திற்காக மின்பிறப்பாக்கி தருவிப்பு

(நல்லூர்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு அடியார்களின் நன்மை கருதி சீரான மின்விநியோக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு அமைவாக நல்லூர் சுற்றாடல் பகுதிக்குள் சீரான மின்விநியோகத்தை வழங்குவதற்கு கொழும்பில் இருந்து 1000 KW மின்பிறப்பாக்கி தருவிக்கப்பட்டுள்ளது.

இம் மின்பிறப்பாக்கி வீரமாகாளி அம்மன் ஆலயத்திற்கு அருகாமையில் வைத்து அருகில் உள்ள மின்மாற்றியுடன் இணைத்து தடையின்றி மின் விநியோகத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.


சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2453 திகதி 17.08.2013

ஆங்கில எழுத்து: W

வெற்றி எண்கள் 04 41 50 69

போனஸ் இல: 47

ஜக்பொட் பரிசு ரூ. 22,140,175/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 267919 | 20/- | 5,358,380/- |
| 2 இல | 19162 | 100/- | 1,916,200/- |
| 3 இல | 420 | 1,000/- | 420,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 10612 | 40/- | 424,480/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 757 | 1,000/- | 757,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 11 | 10,000/- | 110,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 22,140,175/- | - |
| 1 இல + போனஸ் இல | 12827 | 100/- | 1,282,700/- |
| 2 இல + போனஸ் இல | 610 | 500/- | 305,000/- |
| 3 இல + போனஸ் இல | 06 | 100,000/- | 600,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 491 | 200/- | 98,200/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 17 | 1,500/- | 25,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 312834 | | 13,297,460/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2013 ஓகஸ்ட் 21 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 22,870,525/-

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை

356, டீலாறிடீ கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 தொ.பே: 2333546/7

(C/2999)


## நல்லூர் செட்டித்தெரு வீதிக்கு காப்பெற் இடும் பணி துரிதம்



நல்லூர் உற்வத்தை முன்னிட்டு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பணிப்பிற்கு அமைய யாழ்.மாநகரசபை பகுதியில் உள்ள நல்லூர் செட்டித்தெரு வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

600 மீற்றர் நீளமான இவ்வீதிக்கு காப்பெற் இடப்பட்டு நல்லூர் கோயிலுக்கு வரும் அடியார்களுக்கு போக்குவரத்து வசதியை மேற்கொள்ளும் பொருட்டு யாழ்.மாநகரசபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா, யாழ்.நகர ஈ.பி.டி.பி.யின் அமைப்பாளர் றீகன் ஆகியோர் கண்காணிப்பில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## "நல்லைக்குமரன்" நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகராட்சி மன்ற சைவசமய விவகாரக்குழுவினால் வெளியிடப்படும் 'நல்லைக்குமரன்' 21 ஆவது மலர் வெளியீடு எதிர்வரும் புதன் கிழமை யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்ட பத்தில் இடம் பெறவுள்ளது.

மாநகர ஆணையாளரும், சைவசமய விவகாரக் குழுவின் தலைவருமான செ.பிரணவநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்துகொள்வார்

சிறப்பு விருந்தினர்களாக அரசாங்க அதிபர் சுந்தரம் [illegible]மைநாயகம், யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகியோர் கலந்துகொள்வர்.

மாநகர சபையினாலும், மாநகரசபை சைவசமய விவகாரக் குழுவினாலும் நடாத்தப்பட்ட கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டிகளிற்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் நடைபெறும்.



பிரான்ஸ் நாட்டின் பிரதிநிதி திருமதி நரலி கௌலர் தலைமையிலான குழுவின்ர் வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை நேற்று யாழ்ப்பாணத்தில் உள்ள அலுவலகத்தில் சந்தித்து வட மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி தொடர்பாக கேட்டறிந்துகொண்டபோது... (படம் கே.நந்தகுமார்)

## நாடக மக்கள் அரங்க பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்.நிருபர்)

இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தல், வித்தியாசங்களை மதிக்கும் மனப்பாங்கினைக் கட்டி எழுப்புதல், இனங்களுக்கிடையில் ஏற்படும் முரண்பாடுகளை உரையாடல் மூலம் தீர்த்துக்கொள்ளுதல் மற்றும் சகவாழ்வை மேலோங்கச் செய்தல் என்பனவற்றை இலக்காகக் கொண்ட நாடக மக்கள் அரங்கப் பயிற்சி ஒன்[illegible] இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் ஆரம்பிக்கவுள்ளது.

மேடை நாடகம் மற்றும் நாடகப் பிரதியாக்கம், நடிப்பு, சமூக உரையாடல்களை ஒழுங்கு செய்தல் மற்றும் வன்முறைக்கு எதிரான கருத்தாக்கங்களை கலைத்துவாக வெளிப்படுத்தல் ஆகியவற்றில் ஆர்வம் மிக்க இளைஞர்கள், யுவதிகள் இப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கலாம்.

இப்பயிற்சிநெறி முற்றிலும் இலவசமானது. தமிழ், சிங்கள மற்றும் முஸ்[illegible] சமூகங்களைச் சேர்ந்த 35 வயதுக்கு குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தெரி[illegible] போது முன்னுரிமை வழங்கப்படும். வன்முறை கலாசாரத்தை இல்லாதொழி[illegible] இனங்களுக்கிடையில் சக வாழ்வையும் புரிந்துணர்வையும் ஊக்குவிக்கும் நாடகங்கள் பிரதியாக்கம் செய்யப்படும். தபால் மூலம் விண்ணப்பிப்போர் செயற்[illegible] அதிகாரி, கிழக்கு நாடகச் செயற்றிட்டம், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவி[illegible]ளர் மன்றம், இல 85, லியனகே மாவத்தை, நாவல என்ற முகவரிக்கு விண்ண[illegible]களை அனுப்பிவைக்கலாம்.

# களை கட்டுகிறது கசூரினா கடற்கரை

# கரைந்து அழிகிறது தமிழர் கலாசாரம்

## வேடிக்கை பார்க்கிறது பிரதேசசபை

(யாழ்.நிருபர்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் அமைந்துள்ள சுற்றுலா மையத்திற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக என்றுமில்லாத அளவிற்கு அதிகரித்துள்ளது.

பாடசாலை விடுமுறைக்காலம் ஆகையாலும் சனி, ஞாயிறு, போயா விடுமுறை என்பதாலும் தென்னிலங்கையில் இருந்தும் உள்ளூர்களில் இருந்தும் பெருந்தொகையான சுற்றுலாப்பயணிகள் இங்கு வருகை தந்த வண்ணமுள்ளனர்.

காரைநகர் பிரதேசசபையினர் இங்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளுக்குத்தேவையான குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகளை ஏற்படுத்தியுள்ள போதிலும் அவை அதிகரித்துவரும் சுற்றுலாப் பயணிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை. மேலும் வசதிகள் அதிகரிக்கப்படல் வேண்டும்.

கசூரினா சுற்றுலாமையத்தில் மதுப்பாவனைக்குத்தடை விதிக்கப்பட்ட நிலையிலும் இங்கு வருகை தருவோரில் பெரும்பாலான இளைஞர்கள் மது அருந்திய நிலையிலேயே காணப்படுகின்றனர்.

இதற்குக்காரணமாக அமைவது சுற்றுலாமையம் தவிர்ந்த காரைநகரின் ஏனைய பிரதேசங்களில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையாகும்.

இவ்விடயம் தொடர்பாக காரைநகா பிரதேச சபை தவிசாளர் வேலாயுதம் ஆனைமுகன் தெரிவிக்கையில் காரைநகரில் 46 இடங்களில் சட்டவிரோத மதுபான விற்பனை நடைபெறுவது அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், இது பற்றிப்பொலிஸாருக்கு தெரிவித்தும் நடவடிக்கை இல்லை எனவும் விசனம் தெரிவித்தார்.

சுற்றுலா மையத்தில் பொலிஸார் கடமையில் இருப்பதால் சுற்றுலா மையத்திற்கு வெளியில் மரங்களின் கீழும் தனியார் காணிகளிலும் மதுப்பிரியர்கள் மது அருந்துவதையும், வெற்று மதுப்போத்தல்களையும், பியர் ரின்களையும் வீசிச் செல்வதையும் காணமுடிகிறது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் ஓட்டோ மற்றும் ஹஜஸ் ரக வாகனங்களுக்குள்ளும் "கலாசார சீரழிவு" சம்பவங்கள் அரங்கேறுவதையும் காணமுடிகிறது.

பிரதேச சபையினர், பொலிஸார் மற்றும் சமூக நலனோம்பு அமைப்புக்கள் இவற்றைத் தடுத்து நிறுத்த முன்வரவேண்டுமென காரைநகர் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். (10)

# வீதிக்குறியீடுகளை அமைக்குமாறு கோரிக்கை

(அச்சுவேலி)

அச்சுவேலி சந்நிதி வீதியானது காப்பெற் போடப்பட்டு புனரமைக்கப் பட்டுள்ளது. பிரதான போக்குவரத்துப் பாதையாகக் காணப்படும் இவ் வீதயால் இ.போ.ச. பஸ்களும் மற்றும் கனரக வாகனங்களும் பயணிக்கின்றன.

அத்துடன் துவிச்சக்கர வண்டிகளிலும் செல்வோரும் பாதசாரிகளும் இவ்வீதியைப் பயன்படுத்துகின்றனர்.

எனினும் இவ் வீதிக்கு இதுவரை காலமும் வீதிக்கடவைக் குறியீடுகள் எவையும் போடப்படவில்லை எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய மஹோற்சவம் ஆரம்பமாகி திருவிழாக்கள் இடம்பெற்று வருவதால் இவ் வீதியில் போக்குவரத்து அதிகரித்துக் காணப்படுவதால் விபத்துக்கள் ஏற்படும் அபாய நிலையும் காணப் படுகின்றது.

எனவே, இந்த வீதிக்கு வீதிச் சமிக்ஞை குறியீடுகளைப் பதிக்குமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த வருட மஹோற்சவத்தின் போதும் விபத்துக்களும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் 10 ஆம் திருவிழாவின் பின்னரே அதிகளவான பக்தர்கள் தமது நேர்த்திக் கடன்களை இந்த வீதியூடாகவே மேற்கொள்வார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. (85)

# காங்கேசன்துறை வீதியில் குறியீடுகள் இடும் பணிகள்

(சுன்னாகம்)

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதி முழுமையாக காபெற் இடப்பட்டுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் இருந்து தெல்லிப்பளை மாவிட்டபுரம் வரையிலும் தற்போது வீதிக்குறியீடுகள், மஞ்சள் கோட்டுக் கடவைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வீதி ஓரங்கள் செப்பனிடப்பட்டும் வீதி வடிகால்கள் அமைக்கும் பணிகள் சுன்னாகம், தாவடி, நாச்சிமார் கோவிலடிப் பகுதிகளில் நடைபெற்று வருகின்றன. எனினும், கோண்டாவில் உப்புமடம் சந்தியிலும் சுன்னாகம் சந்தியிலும் பத்து மீற்றர் தூரப்பகுதிகளுக்கு காப்பெற் இடப்படாது காணப்படுவதால் இவ்விடத்தை தவிர்த்து வாகனங்கள் விலத்திச் செல்வதால் அடிக்கடி விபத்துக்கள் இவ்விடங்களில் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

உரியவர்கள் இவ்விடயம் தொடர்பாக நடவடிக்கை எடுத்து குறிப்பிட்ட இடங்களை செப்பனிடுவதன் மூலம் விபத்துக்களைத் தவிர்க்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (66)

# துரிதமாக புனரமைக்கப்படும் திருநெல்வேலி ஆடியபாதம் வீதி

(திருநெல்வேலி)

பல ஆண்டுகளாகத்திருத்தப்படாமல் இருந்த திருநெல்வேலி சந்தியிலிருந்து கல்வியங்காடு வரை வரும் ஆடியபாதம் வீதியைத்திருத்தம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மழைகாலம் தொடங்குவதால் அதற்கு முன்னதாக பணிகளை முடிக்கும் நடவடிக்கையாக திருத்தங்கள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், வங்கிகள், வர்த்தக மையங்கள், ஆலயங்கள், மருத்துவ கூடங்கள், மாகாண செயலாளர் அலுவலகம் எனப் பலதரப்பட்ட தேவைகளுக்காகவும் மக்கள் இவ் வீதியை அதிகளவில் பயன்படுத்திவருகின்றனர்.

இந்த வீதி மிகவும் சேதமடைந்த நிலையில் மழை காலங்களில் வெள்ளம் தேங்கி நின்று பயணிகளுக்கு பெரும் இன்னல்களைக் கொடுத்து வந்தன. பள்ளமும் திட்டியுமாகக் காணப்படுவதால் அடிக்கடி வாகன விபத்துக்களும் ஏற்பட்டன. தற்போது இவ் வீதி செப்பனிடப்படுவதையிட்டு மக்கள் மகிழ்வடைந்துள்ளனர்.

இதேசமயம் கல்வியங்காடு சந்தியிலிருந்து நாயன்மார்கட்டு வரை செல்லும் ஆடியபாதம் வீதி தொடர்ந்தும் சேதமடைந்த நிலையிலேயே காணப் படுகின்றது. (137)

# வரணி வடக்கில் டெங்கு ஒழிப்பு

(வரணி)

வரணி வடக்கு ஜே/339 கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட பிரதேசத்தில் டெங்குநோய் பரவாமல் இருக்க சுற்றுச்சூழல் வீடுகள் போன்ற இடங்களில் சுகாதாரப் பிரிவினர் மற்றும் பொலிஸார் தொண்டர்கள் கடந்த வியாழக் கிழமை திடீர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இப்பரிசோதனை நடவடிக்கையின்போது பொது மக்களுக்கு டெங்கு விழிப்புணர்வு சம்பந்தமான அறிவுறுத்தல்கள் மற்றும் எதிர்காலத்தில் டெங்குநோய் பரவாமல் தடுப்பது பற்றிய விளக்கங்கள் அளிக்கப்பட்டன.

யாழ். குடாநாட்டில் தற்போது சுகாதாரப் பகுதியினர் டெங்கு நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கையில் அடிக்கடி ஈடுபட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. (150)

# மாகாணக் கூட்டம்

வடமாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் மாகாணக் கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கைதடி அரச முதியோர் இல்ல கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாவட்ட சமூக சேவைகள் அலுவலர்கள், பிரதேசசெயலக பிரிவின் சமூகசேவைகள் அலுவலர்கள், சமூக சேவை அபிவிருத்தி அலுவலர், சமூகசேவைகள் திணைக்களத்தின் யுனிசெவ் சுயதொழில் வேலைகளின் உத்தியோகத்தர் ஆகியோர் கலந்துகொள்ள உள்ளனர்.

இதில் தவறாமல் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூகசேவைகள் திணைக்களப் பணிப்பாளர் உரிய அலுவலர்களைக் கேட்டுள்ளார். (90)

# நல்லைக் கந்தனுக்கு இன்று எட்டாம் திருவிழா



## உனைக்கண்டு எனை மறந்தேன்

ஒரு ரூபாவோடு உனைக்காண ஓடோடி வந்தேன்
ஒருவாறு உனைக்கண்டு எனை மறந்தேன், முருகா!
குருவாக உனைப்போற்றி எனை மாற்ற வந்தேன்,
குடிமக்கள், மனங்குளிர வரம்கேட்க வந்தேன்.

பெருவாரி பணங்கள் விளைகின்ற பூமியிது ஆனால்
பெரும்பகுதி உருப்படியாக சுவறுவதில்லை முருகா
வருமானமற்ற விதவைகளின் கவலையை யாரறிவார்?
வல்லவொரு தொழில் செய்ய வழிகாட்டு முருகா!

கே.எஸ்.சிவஞானராசா - கொக்குவில்

# நல்லூர் ஆலய சூழலில் இன்று...

நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு இந்து சமய கலாசார திணைக்களத்தால் தினமும் மாலை 3 மணியளவில் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன. நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் 8 ஆம் திருவிழாவான இன்று திங்கட்கிழமை "உருவாய் அருவாய்" என்னும் விடயம் பற்றி த.மனோஜ்குமார் சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து திருநெல்வேலி சிவயோகர் அறநெறிப் பாடசாலை, அனலைதீவு மனோன்மணி அம்பாள், வேலணை சரவணை ஸ்ரீ செல்வக்கதிர்காம முருகன், புத்தூர் கன்னியர் ஸ்ரீ ஞானவைரவர் ஆகிய அறநெறிப்பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பளை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடாத்தும் தெய்வீக இசையரங்கம் தினமும் மாலை 6.45 மணிக்கு நல்லூர் துர்க்காமணிமண்டபத்தில் நடைபெற்று வருகிறது. இதில் 8 ஆம் திருவிழாவான இன்று ஏ.ஜெய ராமனின் வயலின் கச்சேரி, திருமதி எஸ்.ஜெயகௌரி, திருமதி ஜி.ஜெயபாரதி ஆகியோரின் பாட்டுக்கச்சேரி பக்கவாத்திய கலைஞர்கள் சகிதம் இடம்பெற்று வருகிறது.

சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் ப்ரம்மகான சபா நடாத்தும் தெய்வீக இசைச்சங்கம நிகழ்வு தினமும் மாலை 6.30 மணிக்கு நல்லை ஆதீன புதிய மண்டபத்தில் இடம்பெற்று வருகிறது.

இதில் இன்று கொழும்பைச்சேர்ந்த கலா வித்தகர் மதுரா பாலச்சந்திர குருக்களின் வயலின் இசைக் கச்சேரி என்பன இடம்பெறவுள்ளது. (42, 06)


மகோற்சவம் சிறப்புற வாழ்த்துவோர்



சுரேஸ் மோட்டோர்ஸ் & இஞ்சினியர்

மோட்டார் வாகன விற்பனையாளரும்
மோட்டார் திருத்துனரும் மற்றும் சேவிஸ்



நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.
0777064110

இப்பொழுதே மகிழ்ச்சியாய் இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இன்னும துன்பங்கள் வரக் காத்திருக்கின்றன. - பிரேண்டர்ஜான்சன்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.thinamurasu.net

## "அலையை உருவாக்குதல்"

"வெற்றியும் தோல்வியும் வீரர்க்கு அழகானாலும் வெற்றிதானே குறி!" என்று ஒரு பிரபல கவித்துவ வாக்கியம் உண்டு. கட்சிகளாக இருக்கலாம் சுயேச்சைக் குழுக்களாக இருக்கலாம் தனிநபர்களாக இருக்கலாம் எவரானாலும் தேர்தலில் வெல்லும் நோக்குடனேயே தேர்தல் களத்தில் குதிக்கிறார்கள்.

தேர்தலில் வெல்வதற்கு பலரும் பல்வேறு வழிமுறைகளையும் வைத்திருக்கிறார்கள். தங்கள் கொள்கைகளை விளக்கி மக்கள் நம்பிக்கை கொள்ளும் விதத்தில் பிரசாரம் செய்து, வாக்குகளைப் போடுவதற்கான ஆர்வத்தை அவர்களிடம் உண்டாக்குவது ஒரு முறை.

வென்றால் செய்யப் போகும் நலத்திட்டங்களை மற்றும் வாழ்வு முன்னேற்றங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லியும் அவர்களை வாக்களிக்க வைத்து வெற்றிபெற முடியும். இவர்களை வெற்றிபெறச் செய்தால் தங்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இவர்கள் நேர்மையாக உழைப்பார்கள் என்னும் தலைமைத்துவ நம்பிக்கையை அவர்களுக்குக் கொடுத்து அந்தக் கட்சி தேர்தலில் வெல்லலாம்.

இவற்றுக்கெல்லாம் கடும் பிரயத்தனங்களும் உழைப்பும் மேற்கொள்ள வேண்டியிருக்கும். வெறும் வாய்ப்பந்தல் போடாது முன்மாதிரியான பல செயற்திட்டங்களை முன்கூட்டியே நிறைவேற்றிக் காட்டியிருத்தல் வேண்டும். இவர்கள் நிறைவேற்றக் கூடிய வாக்குறுதிகளையே அளிப்பார்கள்; அவ்வாறு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றவும் செய்வார்கள் என்று நடைமுறை ரீதியாக மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

இவ்வாறு மிகுந்த உழைப்பையும் நேர்மையையும் காண்பித்து தேர்தலில் வெல்ல முயற்சிப்பது ஒரு வகையெனில், சும்மா இருந்து கொண்டே இன்றைய செய்தி ஊடக வலிமையைப் பயன்படுத்தி உணர்ச்சிகரக் கோசங்களை விசிறி வென்றுகொண்டிருப்பதும் மற்றொரு முறை.

இதில், மக்களுக்கு எந்த முன்னேற்றத்தையும் செய்துதரப் போவதாக உறுதியளிக்க வேண்டியதில்லை. மக்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக தங்களது செயற்திட்டங்கள் எதையும் முன்வைக்க வேண்டியதில்லை. இனப்பிரச்சினைக்கான தீர்வை எடுப்பது எப்படி, அதற்கு என்ன திட்டம் என்றுகூட சொல்ல வேண்டியதில்லை.

இந்த இலகு வெற்றியைப் பெறும் முறைக்கு "அலையை உருவாக்குதல்" என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பெயர் வைத்திருக்கிறார்கள். எதிர்க் கட்சியினரும் இராணுவத்தினரும் எங்களை அடிக்கிறார்கள் என்று ஊடகங்களில் செய்தி வரச் செய்வதே இந்த முறை.

வடக்கிலுள்ள பெரும்பான்மை மக்களைச் சென்றடையும் ஊடகங்கள் இவர்களது கட்சி சார்ந்தவையாகவே இருந்துவருவதால் இலகுவாக இந்த அலை உருவாக்குதலையும் செய்துகொள்ள முடிகிறது. இராணுவத்தினருக்குக் கல்லெறிந்துவிட்டு ஓடினால் அல்லது சுற்றிவளைத்து நின்று சட்டையைப் பிடித்து இழுத்தால் அவர்கள் திருப்பி இரத்தம் வர அடிப்பார்கள் என்பது எந்தச் சிறு பிள்ளைக்கும் தெரியும்.

அதைச் செய்து காயமடைந்தால் அது போதும், படையினர் தாக்குகிறார்கள் என்று அலையை உருவாக்கிவிடலாம். ஊடகங்களில் கொட்டை எழுத்துக்களில் செய்திகளைப் பார்க்கும் சாதாரண மக்களுக்கு அவர்களுக்கும் அடிவிழலாம் என்ற பயங்கர நினைவை உண்டாக்கும் விதமாக எழுதுவார்கள்.

படையினரைச் சீண்டி அடிவாங்கியவர்களின் படங்களைப் போட்டுப் பிரலாபம் வைத்து எழுதும் முறையில் சும்மா இருப்பவர்களுக்கும் அடிவிழும் என்ற பயத்தை ஏற்படுத்துவார்கள். இது போல, எப்படியாவது காயங்களை வாங்கிக் "குய்யோ முறையோ" அலையை உருவாக்கிக் கொள்ளுதலே கூட்டமைப்பினரின் தந்திரோபாயமாக இருக்கின்றது.

வன்முறையை யாரும் நியாயப்படுத்த முடியாது. ஆனால் திட்டமிட்டுத் தூண்டி, இந்த வன்முறையை வேண்டுமென்றே உருவாக்கிக் காட்டும் தேர்தல்கால உள்நோக்கச் செயல்களைப் பொது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். – ஆசிரியர்

# பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கு ஓய்வு

## மேலதிக வகுப்புகளுக்கு தடை

(கொழும்பு)

புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு பரீட்சைக்கு முன்னர் ஐந்து தினங்களுக்கு ஓய்வு வழங்க பரீட்சைத் திணைக்களம் உரிய ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

இன்று தொடக்கம் ஆகஸ்ட் 25 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்பு, தனியார் வகுப்புக்களை நடத்துவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை குறித்த காலத்தில் மாணவர்களுக்கு பரீட்சை வினாத்தாள் விநியோகமும் தடை செய்யப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 25 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

பிள்ளைகளுக்கு சுதந்திரமாக நேரமும் இருக்க வேண்டும். தரம் 5 புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண, உயர்தரப் பரீட்சைகள் நடைபெறும் தினத்திலிருந்து 5 தினங்களுக்கு முன் இருந்து பரீட்சைகள் முடியும் வரையிலான முழுக் காலத்தில் பரீட்சையில் தோற்று பவர்களுக்குத் துணை வகுப்புக்களை அமைத்தல், விரிவுரை, கருத்தரங்கு, செயலமர்வு, மாதிரி வினாப் பத்திரம் அச்சிட்டு விநியோகித்தல் போன்றவை வர்தமானி மூலம் தடுக்கப்பட்டுள்ளன.

பரீட்சைக்கு முன்னர் பிள்ளைகளுக்கு சிறிது ஓய்வு வழங்க கல்வி அமைச்சு எடுத்த தீர்மானம் காலத்துக்குப் பொருத்தமானதென சிறுவர் நரம்பியல் மருத்துவ நிபுணர் டாக்டர் அநுரத்த பாதெனிய தெரிவித்துள்ளார்.

# அரசாங்கம் மீது மக்கள் அதிருப்தி நவிப்பிள்ளையிடம் முறையிட முடிவு

## தயாராகிறது ஐ.தே.கட்சி

(கொழும்பு)

நாட்டில் அரசியல் பொருளாதார நிலைமைகளை நவிப்பிள்ளையுடன் அலசி ஆராய்வதற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

கொழும்பு வரவுள்ள ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளையை ஐக்கிய தேசியக் கட்சியும் சந்திக்கவுள்ளது.

இதற்கான சந்தர்ப்பம் கிடைக்கப்பெற்றுள்ளதென ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார். அரசாங்கத்தின் சில செயற்பாடுகள் குறித்து நவநீதம்பிள்ளையுடன் பேச்சுவார்த்தை நடாத்தப்படும் என அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் பிழைகளை மூடி மறைத்துக் கொள்ளும் நோக்கிலேயே எதிர்க்கட்சி மீது சேறு பூசப்படுவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

அரசாங்கத்தின் எதேச்சாதிகார நடவடிக்கைகளுக்கு எதிராக பாரியளவில் போராட்டங்கள் நடத்தப்படும் என திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.

# சிறுபான்மையினர் மீது வன்முறை நாட்டின் நலன்களுக்கு பருகுழி

## ஜனசெத்த முன்னணி வருத்தம்

(கொழும்பு)

சிறுபான்மை சமூகங்கள் மீதான தாக்குதல் கள் நாட்டின் நலன்களுக்கு குழிபறிக்கும் செயலாக அமையும் என்று ஜனசெத்த முன்னணி தெரிவித்துள்ளது. மேலும் நாட் டின் சகல இன மக்களினதும் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென ஜனசெத்த முன்னணியின் தலைவர் பத்தரமுல்ல சீலர ட்ன தேரர் தெரிவித்துள்ளார். சில சிறு பான்மை சமூகங்களின் மீது தாக்குதல் நடத்தப்படுவதனை ஏற்றுக்கொள்ள முடியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதம் பாராட்டாது அனைவரினதும் உரிமைகள் உறுதி செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். தற்போதைய சமூகக் கட்டமைப்பில் வன்முறைச் சம் பவங்களுக்கு அனுமதியளிக்கமுடியாது என சுட்டிக்காட் டியுள்ளார்.

சிறுபான்மை சமூகம் மீதான தாக்குதல் தேசத்தின் நலன்களை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இன நல்லிணக்கத்தின் மூலம் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில் அனைத்து இன சமூக மக்களும் ஒன்றிணைந்து தாய் நாட்டை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

# வெளியுறவுக் கொள்கைக்கு வெற்றி அமைச்சர் ஜீ.எல்.பெருமிதம்

எதிர்வரும் நவம்பர் மாதம் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை கொழும்பில் நடாத்துவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளமை அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகளுக்கு கிட்டிய மாபெரும் வெற்றியாகவே கருதவேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

லக்கலவில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை நடாத்துவதன் மூலம் நாடு பாரியளவில் நன்மைகளை அடையும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். குறுகிய நோக்கங்களை உடைய சில தரப்பினர் அமர்வுகளுக்கு எதிராக போலிப் பிரசாரங்களை மேற்கொண்டு வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அமர்வுகளை நடாத்துவதன் மூலம் உலகத் தலைவர்களுக்கு நாட்டின் மெய்யான நிலைமைகளை நேரில் பார்வையிட சந்தர்ப்பம் கிட்டும் என குறிப்பிட்டுள்ளார்.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசத்திலும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அரசாங்கம் பாரியளவில் அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருவதாக அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

# வைத்தியநாதன் தவநாதன் [ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் சார்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் முதன்மை வேட்பாளர்]

**நேர்கண்டவர் : சதீஸ்**

# கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் நாமே அதிகமான வெற்றிவாய்ப்பைக் கொண்டுள்ளோம்

**கிளிநொச்சியில் விவசாயம், கடற்றொழில் ஆகிய தொழில்களை அதிகமாகச் செய்யும் மாவட்டம் என்ற அடிப்படையில் இந்த இரண்டு துறைகளையும் விருத்தி செய்வதற்காக நாம் ஏராளமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். தற்போதும் சிறிய, பெரிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் எமது மக்களுக்கு இன்னும் பல தேவைகள் உள்ளன. எமது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களுடன் இணைந்து நாம் இரவுபகலாக மக்களுக்கான பணியை செய்து வருகின்றோம். இதை நன்றி உணர்வுடன் எல்லா மக்களும் இன்று உணர்ந்துள்ளனர். எமக்கான ஆதரவுப் பலம் பலமடங்கு பெருகியுள்ளது. அடுத்து வரும் மாகாண சபையில் அதிகாரத்தை நாங்கள் பெறும்போது மிகக் குறுகிய காலத்தில் மிக உச்சமான முன்னேற்றத்தை வழங்குவோம்.**



**கேள்வி :** மாகாண சபைத் தேர்தல் பற்றிய உங்களுடைய நிலைப்பாடு என்ன?

**பதில் -** 25 ஆண்டுகளுக்கு முன்பு - 1987 இல் இலங்கை இந்திய உடன்படிக்கையின் விளைவே மாகாண சபை முறைமை. அப்போது தமிழர் பகுதிக்கு மட்டும் வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபை உருவாக்கப்பட்டது ஏனைய மாகாண சபைகள் தனித்தனியானவை. வடக்கு-கிழக்கு இணைந்த மாகாண சபை விடுதலைப் புலிகளால் நிராகரிக்கப்பட்டது. இப்பொழுது வடக்கு வேறு கிழக்கு வேறு என துண்டாடப்பட்ட மாகாண சபைக்கான போட்டி நடைபெறுகின்றது.

ஆனாலும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினராகிய நாங்கள் மாகாண சபை முறையை தொடர்ந்து ஆதரித்து வருகின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வுக்கு மாகாண சபை முறையிலிருந்து நாங்கள் முன் நகரலாம். இதை 25 ஆண்டுகளுக்கு முன்னரே எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளார். ஆனால் அன்று இதை ஏற்க மறுத்தவர்கள் இன்று பின் கதவால் மாகாண சபை முறைமையை ஏற்றுக்கொள்வதற்கு முன் வந்துள்ளனர்.

ஆகவே எமது அரசியல் நிலைப்பாட்டிற்கு கிடைத்துள்ள வெற்றியாகவே இதைக் கருதுகிறேன்.

**கேள்வி :** ஆனால் அப்போது மாகாண சபைக்கான அதிகாரங்கள் போதாது என்று அன்றைய முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் கூறியிருந்தாரே இதுபற்றி உங்களது கருத்து என்ன?

**பதில் -** அதிகாரங்கள் எதுவுமே இல்லை என்று அவர் கூறியிருக்கவில்லையே. அன்றைய சூழலில் மாகாண சபை நிர்வாக முறைமையை நடைமுறைப் படுத்துவதற்கு பக்கபலமாக இருந்த இந்திய அரசையும், இந்திய அமைதிப் படையையும் வெளியேற்றும் நடவடிக்கையை பிரேமதாஸ அரசும் விடுதலைப் புலிகளும் இணைந்து கூட்டாக மேற்கொண்டனர். இதனால் மாகாண சபையை சீராக இயக்குவதில் நெருக்கடிகள் ஏற்பட்டன. இதையே வரதராஜப் பெருமாள் வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனாலும் நாம் மாகாண சபை முறையை ஆரம்பமாகக் கொண்டு படிப்படியாக அதிகாரங்களை பெற்றுக்கொள்ளலாம் என்ற நம்பிக்கையுடன் தொடர்ந்து செயற்பட்டு வருகின்றோம்.

**கேள்வி :** இன்றைய மாகாண சபை அதிகாரங்கள் தமிழ் மக்களுடைய அரசியல் மற்றும் வாழ்வாதார உரிமைகளை நியாயமான முறையில் வழங்குமா?

**பதில் -** தற்போதும் மாகாண சபை முறைக்குக் கீழ்தான் பல வகையான நிர்வாக நடைமுறைகளும் அதிகாரங்களும் உள்ளன. வடமாகாண சபை மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு சபையாக இதுவரை செயற்படாத காரணத்தினால் மாகாண சபை முறை குறித்த சந்தேகங்களை மாற்றுக் கட்சியினர் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றனர்.

இலங்கையின் ஏனைய மாகாணங்களில் மட்டுமல்ல தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் கிழக்கு மாகாணத்தில் கூட மாகாண சபை வெற்றிகரமாக செயற்பட்டு வருகிறது. தற்போது கிழக்கு மாகாண சபையில் எதிர்க்கட்சி ஆசனத்தில் இருக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் கூட மாகாண சபைக்கு அதிகாரங்கள் இல்லையென குறிப்பிடவில்லை.

மாகாண சபை முறைமையானது அடிப்படையில் அதிகாரப் பரவலாக்கல் முறைமையே. அதை நடைமுறைப் படுத்தும் போது தான் படிப்படியாக மாகாண சபை முறைமையில் இருக்கும் சட்டபூர்வமான விடயங்கள் மக்களைச் சென்றடையும்.

**கேள்வி :** மாகாண சபைத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயக் கட்சியின் செல்வாக்கு எப்படியுள்ளது?

**பதில் -** எமது கட்சிக்கு அடிப்படையான வாக்கு வங்கி ஒன்று உள்ளது. கடந்த 25 வருடங்களாக எமது கட்சி மக்களின் அன்றாடப் பிரச்சினைகளிலிருந்து அரசியல் உரிமை பிரச்சினை வரை தளம்பல் இல்லாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது. இப்பொழுது வடமாகாணத்தில் நான்கு வருடங்களில் சுமுகமான நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் எமது கட்சியினதும், எமது அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களினதும் பங்கு காத்திரமானது. இதை மக்கள் தெளிவாக புரிந்துவைத்துள்ளனர். எனவே இந்த தேர்தலில் எமது கட்சியின் செல்வாக்கு மிகவும் உயர்ந்துள்ளது.

கிளிநொச்சியைப் பொறுத்தவரையில் நாமே அதிகமான வெற்றிவாய்ப்பைக் கொண்டுள்ளோம்.

**கேள்வி :** இன்றைய நிலையில் தமிழ் மக்கள் எவ்வாறு இந்த மாகாண சபையை பொருத்தமாக பயன்படுத்த முடியும் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

**பதில் -** முதலில் மக்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். தங்களோடு இருப்பவர்கள் யார்?. தங்களுக்காக அர்ப்பணிப்புடன் உழைப்பவர்கள் யார்?, பிரச்சினைகளைத் தீர்த்து, தேவைகளை நிறைவேற்றுபவர்கள் யார்? யதார்த்தமான முறையில் அரசியல் தீர்மானங்களை எடுப்பவர்கள் யார்? என்ற தெளிவோடு தங்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்தால் மாகாண சபையை தங்களுக்குரிய சபையாக பெற்றுக்கொள்ள முடியும். எனவேதான் மக்களுடன் வாழும், அவர்களுடைய தேவைகளையும், அரசியல் உரிமைகளையும் நடைமுறைச் சாத்தியமான முறையில் பெற முயலும் எம்மை ஆதரிக்க வேண்டும் என கேட்கின்றோம்.

அடுத்தது நாம் மக்களுக்கான தேவைகளின் அடிப்படையில் அரசுடன் இணைந்திருப்பதனால் மாகாண சபையை அரசின் ஒத்துழைப்புடன் வெற்றிகரமாக இயங்க வைப்போம். ஆகவே மக்களுக்கான அதிக பலனை எமது தரப்பினாலேயே வழங்க முடியும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றால் எவ்வாறு அரசியல் தீர்வும் இல்லாமல் அபிவிருத்தியும் இல்லாமல் மக்களுடைய பிரச்சினைகளும் தீர்க்கப்படாமல் காலம் வீணடிக்கப்படுமோ அவ்வாறுதான் மாகாண சபையும் செயலற்ற நிலைக்குப்போகும்.

**கேள்வி :** கிளிநொச்சியில் மக்களுடைய வாழ்க்கையும் அரசியல் விருப்புகளும் எப்படியுள்ளன?

**பதில் -** மீள்குடியேற்றத்தின் மூலம் மீண்டும் தங்கள் சொந்த ஊர்களுக்கு திரும்பிய கிளிநொச்சி மக்கள் மூன்றாண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலை இன்றில்லை. மிகக் குறுகிய காலத்திற்குள் அவர்களுடைய வாழ்க்கை பல வகையிலும் முன்னேற்றமடைந்துள்ளது. வீட்டு வசதி, மின்சாரம், கல்வி, மருத்துவம், போக்குவரத்து போன்ற அடிப்படையான வசதிகளை நாம் கடுமையாக உழைத்து உருவாக்கியுள்ளோம்.

கிளிநொச்சியில் விவசாயம், கடற்றொழில் ஆகிய தொழில்களை அதிகமாகச் செய்யும் மாவட்டம் என்ற அடிப்படையில் இந்த இரண்டு துறைகளையும் விருத்தி செய்வதற்காக நாம் ஏராளமான திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளோம். தற்போதும் சிறிய, பெரிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன. ஆனாலும் எமது மக்களுக்கு இன்னும் பல தேவைகள் உள்ளன. எமது நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் அவர்களுடன் இணைந்து நாம் இரவுபகலாக மக்களுக்கான பணியை செய்து வருகின்றோம். இதை நன்றி உணர்வுடன் எல்லா மக்களும் இன்று உணர்ந்துள்ளனர். எமக்கான ஆதரவுப் பலம் பலமடங்கு பெருகியுள்ளது.

அடுத்து வரும் மாகாண சபையில் அதிகாரத்தை நாங்கள் பெறும்போது மிகக் குறுகிய காலத்தில் மிக உச்சமான முன்னேற்றத்தை வழங்குவோம்.

**கேள்வி :** உங்களுடைய அரசியல் பிரவேசமும், செயற்பாடுகளும் பற்றிக் கூறுங்கள்?

**பதில் -** எண்பதுகளின் ஆரம்பத்தில் இடதுசாரி ஈழ விடுதலை இயக்கங்கள் ஊடாக எனக்கு போராட்ட அரசியலில் ஆர்வம் ஏற்பட்டது. அதன் பின்பு திசைமாறிச் சென்ற ஈழ விடுதலைப் போராட்டத்தின் தலைமைகளை நிராகரித்து பல்வேறுபட்ட போராளிகளும் இணைந்து தோழர் டக்ளஸ் தேவானந்தாவின் தலைமையில் உருவான ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியில் அதன் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவராக இன்றுவரை இருந்து மக்கள் சேவை செய்து வருகிறேன். தொடர்ந்தும் செய்வேன். ஏனெனில் ஒரு இடதுசாரி போராளியினால் மக்கள் சேவையில் இருந்து விலகியிருக்க முடியாது என நான் உறுதியாக நம்புகிறேன்.

# லண்டன் சென்ற பேராசிரியர்களை வீட்டுக்கு அனுப்ப நடவடிக்கை

## புலனாய்வு விசாரணைகள் துரிதம்

(கொழும்பு)

லண்டனில் நடைபெற்ற தமிழீழ மாநாட்டில் கலந்துகொள்வதற்காக பிரதமர், உயர்க்கல்வி அமைச்சர் உள்ளிட்ட அதிகாரிகளை ஏமாற்றி அனுமதியை பெற்றுக்கொண்ட இலங்கை பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த 12 விரிவுரையாளர்களை உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பணிகளில் இருந்து நீக்க உயர்கல்வி அமைச்சு தயாராகி வருகிறது என கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன

பிரதமரையும், தன்னையும் ஏமாற்றி அனுமதியை பெற்றுக்கொண்ட விரிவுரையாளர்களில் 04 பேர் வரை குறித்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ளதர்கவும் ஏனையவர்கள் விசா அனுமதி கிடைக்காததால் பிரித்தானியாவுக்குச் செல்ல முடியாத போதிலும் அவர்கள் அனைவரையும் பணியில் இருந்து நீக்குவதற்கான உரிய விசாரணைகளை நடாத்துமாறு அமைச்சின் செயலாளர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு அறிவித்துள்ளதாகவும் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி முதல் 18 ஆம திகதி வரை லண்டனில் நடைபெற்ற தமிழ் அறிவியல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொள்ளச்செல்வதாக கூறி, இந்த விரிவுரையாளர்கள், பிரதமரிடமும், உயர்கல்வி அமைச்சரிடமும் அனுமதி பெற்றுள்ளனர்.

எனினும் இந்த மாநாடு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் நடவடிக்கை மத்திய நிலையத்தினால் நடாத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த விடயம் தொடர்பில் சரியான தகவல்களை பெற்றுக்கொள்வதற்காக இலங்கை வெளிவிவகார அமைச்சும், பாதுகாப்பு அமைச்சும் பிரித்தானிய அரசாங்கத்தின் உதவியை பெறவுள்ளன எனவும் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

ஒற்றையாட்சி நாட்டுக்கு ஆதரவாக பதவிப்பிரமாணம் செய்து கொண்டுள்ள இலங்கையின் எந்த அரச அதிகாரிகளும் பிரிவினைவாத நோக்கத்தின் கீழ் நடாததப்படும் இவ்வாறான மாநாடுகளில் கலந்துகொள்ள எவ்விதமான சட்ட ரீதியான அனுமதிகளும் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். ரமீஸ், கிழக்கு பல்கலைக்கழக பேராசிரியர் செல்லையா யோகராஜ், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். சுப்ரமணியம், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் வீ.மகேஸ்வரன் யாழ். பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் எஸ். தர்மேந்தி, பேராதனைப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலக அதிபர் ராசையா மகேஸ்வரன் மற்றும் பேராசிரியர் விசாகரூபன் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக விடுமுறை அனுமதியை பெற்றுள்ளனர்.

புலனாய்வு தகவல்களின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு இது குறித்து கவனம் செலுத்தியதாகவும் இதன் போது இவர்கள் ஆய்வு ஒன்று செல்வதாகக்கூறி அனுமதியை பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது எனவும் அமைச்சர் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு, புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் விசாரணைகளை நடாத்தி வருவதாகவும் இவர்கள் நாட்டின் இறையாண்மைக்கு எதிராக செயற்பட்டிருந்தால், அவர்கள் உடனடியாக பதவிகளில் இருந்து நீக்கப்படுவார்கள் எனவும் அமைச்சர் கூறியுள்ளார் என கொழும்பு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

## மரபுரிமை அந்தஸ்து பறிபோகும் அபாயம் காலி கோட்டைக்கு மவுசு இழப்பு




(கொழும்பு)

காலி கோட்டையை அண்டிய பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சட்டவிரோத கட்டட நிர்மாணங்களினால் இந்த அபாயம் ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் தேசிய மரபுரிமைகள் அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

காலி கோட்டையின் தனித்துவ அடையாளங்கள் காரணமாக அதனை உலக மரபுரிமைகளில் ஒன்றாக யுனெஸ்கோ பிரகடனம் செய்திருந்தது. 16 முதல் 19 ஆம் நூற்றாண்டு வரையிலான ஐரோப்பிய கட்டட நிர்மாணக் கலையும், தென் ஆசிய கலாசாரமும் ஒருசேர இந்த கோட்டை அமைக்கப்பட்டுள்ளது.

கோட்டையை அண்டிய பகுதிகளில் அமைந்துள்ள சில கட்டடங்கள் புனரமைக்கப்பட்டு வருவதாகவும் இதனால் அதன் தொன்மை அழிவடைந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே காலி கோட்டையின் தனித்துவத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தப் பட்டுள்ளது.

## செயற்கைப் பசளைக்கு விளம்பரம் செய்யத் தடை

### யோசனை அமைச்சரவைக்கு



(கொழும்பு)

நியூஸிலாந்தின் பால் மா தொடர்பில் பிரச்சினை ஏற்பட்டு பால்மாக்கள் தொடர்பில் விளம்பரங்களுக்கு தடையும் விதிக்கப்பட்டுள்ள நிலையில் இப்போது புதிய விளம்பர தடை ஒன்று அமுல்செய்யப்படவுள்ளது.

தற்போது நீரிழிவு நோயின் தாக்கம் அதி கரித்து வருகிறது. இதற்கு பயிர்களுக்கு இடப்படும் செயற்கைப் பசளையும் காரணமாக இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்தநிலையில் சில செயற்கை பசளைகளுக்கான விளம்பரங்களையும் தடைசெய்யவேண்டும் என்று ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

விவசாயத்துறை அமைச்சர் மகிந்த யாப்பா அபேவர்த்தன இதற்கான யோசனையை முன்வைத்துள்ளார். இந்த யோசனை விரைவில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# நவிப்பிள்ளைக்கு பதில் வழங்க இராஜதந்திர வியூகம் தயார்

## போர்க்குற்றம் பற்றிய பேச்சுக்கு இடமில்லை

(கொழும்பு)

இம்மாத இறுதியில் பொழும்புவர இருக்கும் நவநீதம்பிள்ளை அரசிடம் கேட்கும் கேள்விகளுக்கு இராஜதந்திர அணுகுமுறையுடன் பதில் வழங்குவதற்கு கொழும்பில் உள்ள முக்கிய இராஜதந்திரிகள் தயாராகி வருகின்றனர்.

எதிர்வரும் 25 ஆம் திகதி கொழும்பு வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை போர் குற்றம் தொடர்பாக சர்வதேச விசாரணைக்கு இணங்குமாறு கோரிக்கை விடுத்தால் அதனை முற்றாக நிராகரிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நவநீதம்பிள்ளை, பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷவையும் சந்திக்க உள்ளதாகவும் இதன்போது, போர் குற்றச்சாட்டுகள் பொய்யானது என்று அவருக்கு தெளிவுப்படுத்தப்படவுள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்டத் தரப்பு தகவல்கள் தெரிவித்தன.

ஐந்து நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வரும் மனித உரிமை ஆணையாளர் பல்வேறு தரப்பினரை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடாத்தவுள்ளதாக அவரது பேச்சாளர் ரூபட் கோல்வில் அரசாங்கத்திற்கு அறிவித்துள்ளார்.

நீதியமைச்சர் ரவூவ் ஹக்கீம், நவநீதம்பிள்ளையைச்



சநதித்து பேச்சுவார்த்தை நடாத்த இணக்கம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை அரசசார்பற்ற நிறுவனங்களை சேரந்த 30 அதிகாரிகள் மனித உரிமை ஆணையாளரை சந்திக்க சந்தர்ப்பம் கேட்டுள்ளதாக தெரியவருகிறது.

# ஜெயலலிதாவின் கர்ச்சிப்பு சாடுகிறது ஹெல உறுமய

(கொழும்பு)

இந்திய சுதந்திர தினத்தில் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் ஊடக செயலாளர் நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதா ஜெயராம் தொடர்ந்தும் இலங்கையின் இறையாண்மை மற்றும் சுதந்திரத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டு வருகிறார்.

தமிழக முதலமைச்சரின் கருத்துக்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கவனம் செலுத்தாதது சம்பந்தமாக ஜாதிக ஹெல உறுமய கவலையடைகிறது.

இலங்கை அரசாங்கம் அமைதியாக இருந்தால், தமிழகத்தின் அழுத்தங்களை இலங்கை நேரடியாக எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும்.

தமிழகத்தையும் இந்திய மத்திய அரசாங்கத்தையும் ஒப்பிடும் போது, நாய் வாலாட்டுவதற்கு பதிலாக நாயை வால் ஆட்டுவிக்கின்றது என்றார்.

சென்னையில் நேற்று முன் தினம் நடைபெற்ற இந்திய சுதந்திர தின விழாவில் உரையாற்றிய ஜெயலலிதா, கச்சதீவில் தமிழகத்திக்குள்ள உரிமை நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கை தனக்கு இருக்கிறது எனத் தெரிவித்திருந்தார்.

# வெலிவேரிய விசாரணை இடை நிறுத்தம் பின்கதவு அழுத்தங்கள் காரணமா?

## பாதிக்கப்பட்டவர்கள் குமுறல்

(கொழும்பு)

வெலிவேரிய துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் குறித்த விசாரணைகளை ஆறப்போடும்படி பினகதவு மூலமாக மனித உரிமை ஆணைக்குழுவுக்கு அழுத்தங்கள் கிடைத்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. வெலிவேரிய ரத்துபஸ்வல சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை மனிதஉரிமை ஆணைக் குழு தற்காலிகமாக இடை நிறுத்தியுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கும் ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு முடிவடையும் வரையில் விசாரணைகளை இடைநிறுத்தி வைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்தச்சந்திப்பின் பின்னர் விசாரணைகள் தொடரும் என ஆணைக்குழுவின் தலைவர் நீதவான் பிரியந்த பெரேரா தெரிவித்துள்ளார்.

இரண்டு வாரங்களில் விசாரணைகள் மீள ஆரம்பிக்கப்படும் எனவும், தேவை ஏற்பட்டால் இராணுவத்தினர், காவற்துறையினர், பிரதேச மக்கள், பௌத்த மதகுருமார் மற்றும் கிறிஸ்தவ மதகுருமார் ஆகியோரைச்சந்தித்து விசாரணை நடாத்தவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். பிரதேசமக்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் மதகுருமாரிடம் ஏற்கனவே வாக்குமூலங்கள் பதிவு செய்யபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

# கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் சமூக நலனோம்பு அட்டை வழங்கல்

## -மூன்றாம் கட்டம் வேலைத்திட்டம்-

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் உள்ள கரைச்சிப் பிரதேச செயலக பிரிவில் வசிக்கும் மாற்றுவலுவுள்ளோர்களுக்கு சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான வேலைத் திட்டத்தின் மூன்றாம் கட்டம் எதிர்வரும் 23ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் 26 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெற உள்ளது. இதற்கான ஏற்பாடுகளை மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி.கேதீஸ்வரன், வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் நளாயினி இன்பராஜ் ஆகியோர்ரின் வழிகாட்டலில் கரைச்சிப் பிரதேச செயலர் கோபாலபிள்ளை நாகேஸ்வரன் மேற்கொண்டுள்ளார்.

வடமாகாண சமூக சேவைகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் இதற்கான வேலைகளைச் செய்ய உள்ளனர். கிளிநொச்சி மாவட்ட சமூக சேவைகள் அதிகாரி வே.தபேந்திரன் தலைமையில் இப் பணிகளில் நடைபெற உள்ளன.மாற்றுவலுவுள்ளோர் அனை வரும் ஏற்கனவே 4 பக்கப் படிவங்களை நிரப்பி பதிவு செய்துள்ளனர். பதிவு செய்யாமல் தவற விடப்பட்டவர்கள் இந்த வேலைத்திட்டத்தில் பதிவு செய்யப்படஉள்ளனர். மாற்று வலுவுள்ளோர் அனைவருக்கும் இலவசமாகப் புகைப்படம் எடுக்கப்பட்டு பதிவுகளை மேற்கொள்ளவுள்ளனர். பின்னர் சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்க நடவடிக்கைகள் எடுக்கப் படவுள்ளன.

இதற்காக தமது குடும்ப அட்டை, அடையாள அட்டையுடன தங்களுக்குகென அறிவிக்கப் படும் இடங்களில் உள்ள கிராம அலுவலர் அலுவலகங்களுக்கு உரிய நேரத்தில் சமுகமளிக்க வேண்டுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.இவ்வேலைத்திட்டத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கிராம வெளிக்கள உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாதர் கிராம அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், சமூக சேவைகள் தொண்டர்கள் ஆகியோரும் கிராம அலுவலருடன் இணைந்து பணியாற்ற பிரதேச செயலர் கோ. நாகேஸ்வரன் ஏற்பாடு செய்துள்ளார்.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பெரிய பரந்தன் கிராம அலுவலர் பிரிவிலும், பிற்பகல் 12.00 மணிக்கு பன்னங்கண்டி கிராம அலுவலர் பிரிவிலும்

26 ஆம் திகதி காலை 10 மணிக்கு உதயநகர் மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும் ,பிற்பகல் 12.30 மணிக்கு உதயநகர் கிழக்குகிராம அலுவலர் பிரிவிலும் நடைபெறவுள்ளது.

இந்த நேர ஒழுங்கில் மாற்று வலுவுள்ளோரைச் சமுக மளிக்குமாறு பிரதேச செயலரால் அறிவிக்கப்பட்டுள்ளது. நேரடியாகச் சமுகமளிக்க முடியாத மாற்று வலுவுள்ளோருக்கு வீட்டில் சென்று உரிய அதிகாரிகளால் புகைப்படம் எடுக்கவும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஏற்கனவே, 25 கிராம அலுவலர் பிரிவுகளில் இவ்வேலைத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதில் 451பேர் பதிவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.ஏனைய 13கிராம அலுவலர் பிரிவுகளில் எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில்இரு குழுக்களால் இவ்வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ் மாவட்டத்திலிருந்து சமூக சேவை கள் அதிகாரிகள் குழுவொன்று இவ்வேலைத் திட்டத்தில் பங்கு கொள்ளஉள்ளது. இதற்கான நேரஅட்டவணை பின்னர் அறிவிக்கப்படுமென பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (90)

# பாடசாலை எஸ்.டி.எம்.ஜி.திட்டத்திற்கு இவ்வருடம் கூடுதல் நிதி ஒதுக்கீடு

(அச்சுவேலி)

கல்வி அமைச்சின் அனுசரணையுடன் அமுல்படுத்தி செயற்படுத்தப்பட்டு வரும் எஸ்.டி.எம்.ஜி செயற்றிட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்டுள்ள பாடசாலைகளுக்கு கடந்த வருடங்களில் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினை விட கூடுதல் நிதியினை இவ்வருடம் ஒதுக்கீடு செய்யப்படவிருப்பதாக மேற்படி செயற்றிட்டத்திற்கு பொறுப்பான வடமாகாணகல்வி அமைச்சின் அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி செயற்றிட்டத்தில் உள்வாங்கப்பட்டிருந்த பாடசாலைகளுக்கு கடந்த வருடம் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும் இவ்வருடம் இந்நிதித் தொகை முன்னைய தொகையின் இருமடங்கினை அண்மித்த தொகையாக வழங்குவதற்கு தீரமானிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிதியினைப் பயன்படுத்தி வகுப்பறைத் திருத்தங்கள், கணனியறைத் திருத்த வேலைகள், ஆரம்பவகுப்புக்களிற்கான வகுப்பறைகளின் கவின் நிலைகளை மேம்படுத்தல், மாணவர்களுக்கான குடிநீர் விநியோக மார்க்கங்களின் திருத்தம், மலசல கூடத் திருத்தங்கள், பாடசாலை பூந்தோட்டத்தை மேம்படுத்தல் , பாடசாலைக்கான பாதுகாப்புவேலி அமைத்தல் போன்ற செயற்பாடுகளுக்கு பயன்படுத்திக் கொள்ள முடியும் மேலும ஒவ்வொரு செயற்றிட்டத்தினையும் அமுல்படுத்தும்போது அவற்றிற்குரிய நிதிப்பிரமாண திட்டமிடலுக்கேற்ப செலவீனங்கள் இடம்பெற வேண்டும் எனவும் செலவீனங்கள் தொடர்பான அறிக்கைகள் காலதாமதமின்றி உரியகாலத்தில் சமர்பிக்கப்படவேண்டும் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரியினால் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளின் அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (03)

# சாவகச்சேரியில் மருத்துவமுகாம்



சுகாதார அமைச்சின் ஏற்பாட்டில் மாபெரும் மருத்துவமுகாம் நேற்று முன்தினம் சாவகச்சேரி சிவன் கோவிலடி கலை,கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர்கள் கலந்து கொண்டு பொதுமக்களுக்கான பல்வேறு சிகிச்சைகளை வழங்கியதுடன், பரிசோதனைகளையும் மேற்கொண்டனர். மேலதிக சிகிச்சைக்கான சிபார்சு மேற்கொள்ளப்பட்டதுடன்,கண் பரிசோதனை செய்து அவர்களுக்கான கண்ணாடிகளும் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த மருத்துவ முகாமில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டு சிகிச்சை பெற்றனர். (11)

# நல்லூர் மேற்கு வீதியில் "சென் ஜோன்ஸ்" அலுவலகம்

(திருநெல்வேலி)

யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் அலுவலகம் ஒன்று நல்லூர் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் அமையப் பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் தொண்டர்கள் கோவில் திருவிழா நாட்களில் தமது உயரிய சேவையை கோவிலுக்கு வரும் அடியவர்களுக்கு ஆற்றி வருகின்றார்கள்.

திருவிழாவை முன்னிட்டு சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை 24 மணிநேரமும் தொடர்ந்து இயங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இச்சேவையைப் பெற்றுக் கொள்ள விரும்பும் அன்பர்கள் 0213214444 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பயனடைய முடியும் என சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸின் யாழ். மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வரஞ்சன் அறிவித்துள்ளார். (137)

# சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு சந்நிதியான் ஆச்சிரமத்தில் தினமும் காலை 10 மணிக்கு விசேட சொற்பொழிவுகள் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று திங்கட்கிழமை சைவப்பண்பாடு என்னும் விடயம் பற்றி சைவப்புலவர் காரை எம்.பி அருளானந்தம் சொற்பொழிவாற்றவுள்ளார். (01)

# பேருந்து தரிப்பிடத்தில் தேங்கி நிற்கும் தண்ணீர்

(வரணி)

வரணி சிட்டிவேரம் ஆலய வாசல் அருகில் அமைந்திருக்கும் பேருந்து தரிப்பிடவாசல் வீதியும் சேதமடைந்த நிலையில் தண்ணீர் தேங்கி சேறும் சகதியுமாக காணப்படுகிறது. பெருமளவு வாகனங்கள் மற்றும் ஆலயத்திற்கு வரும் அடியவர்கள் பயணிகள் இந்த வீதியை கடந்தே செல்லவேண்டியுள்ளது. மக்கள் நலன் மற்றும் வாகன உரிமையாளர்களின் அவலத்தை போக்கி இந்த வீதியை புனரமைத்து நீர் தேங்காமல் வழிந்தோட உரியவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டுமென பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (150)

# தொழிற்பயிற்சிக்கு விண்ணப்பம் கோரல்

(யாழ்.நிருபர்)

வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகம் பாடசாலையை விட்டு வெளியேறியவர்களுக்கான தொழிற்பயிற்சிகளை ஆரம்பிக்கவுள்ளது.

இப்பயிற்சி நெறிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் முத லாம் திகதி ஆரம்பமாகவுள்ளன. இப்பயிற்சிநெறியில் தமிழ் சுருக்கெழுத்து, தட்டச்சு, ஆங்கில தட்டச்சு,கணனிக் கற்கைநெறி தமிழ்த்தட்டச்சு விசைப்பலகைப்பயிற்சி என்பவை பயிற்று விக்கப்படவுள்ளன.

சிங்களமும்,கணக்கியல் பயிற்சிகளும் மாணவர் விரும்பத்திற்கமைய ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாக மேற்படி பயிற்சி நெறிகளைப் பயில்வதற்கு ஆர்வமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்குமாறு வடமராட்சி சுருக்கெழுத்துக்கழகம் அறிவித்துள்ளது. (10)

# முரசின் இன்றைய பலன்



(19.08.2013 திங்கட்கிழமை)

விஜய வருஷம் ஆவணி மாதம் 03 ஆம் திகதி.
உத்தராடநட்சத்திரம் பி.ப 03.57 வரை,பின் திருவோணம்
மரணயோகம்திரயோதசி-திதி
இராகுகாலம 07.35- 09.05 வரை. சுபநேரம 12.05- 01.35 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | மனஅமைதிக்காக சுற்றுலா,காணி உறுதி பெற விண்ணப்பம்,நோய்க்காக மருத்துவ மனையில் அனுமதிப்பு,மின்சாரத்தடையால் நட்டம். |
| ரிஷபம் | மக்களின் உயர்வு கண்டு ஆனந்தம், முதலாளி தொழிலாளி தகராறு சுமுகமடைதல்,ஆபரணம் அணியாமையால் நன்மை,வாகனயோகம். |
| மிதுனம் | உதவப்போய் நன்மை கிட்டுதல், பூப்படைதல், கடன்பெற கையொப்பம் இடுதல்,வெளியூர் பயணத்திற்கான அழைப்பு. |
| கடகம் | சுபகாரியச்செலவு,பிதாவிற்கு திடீர் சுகயீனம், புண்கள் மாறும் அறிகுறி தென்படல்,பணம் எடுத்துச் செல்வதில் கவனக்குறைவால் இழப்பு. |
| சிம்மம் | காலாவதியான பொருளைப் பெற்று கவலை, பயணம் பற்றிய மீளாய்வு,பிரயாணத்தில் காதல் உறவு ஏற்படுதல்,ஆவணம் இன்மையால் தண்டம். |
| கன்னி | உயர்கல்விக்கு பரீட்சை முடிவு சாதகமாதல், சுவீப்பில் பணம், மனதைவாட்டும் செய்தி கிடைத்தல், திருடர் பற்றிய அச்சம்,தனிமையால் கவலை. |
| துலாம் | மிதிபலகை பிரயாணத்தால் விபத்து,காதலில் சந்தேகம் வளரல், சகோதரியினால் உதவி, கண் சிகிச்சைக்காக வெளியூர் செல்லுந்திட்டம். |
| விருச்சிகம் | அறுவடையினால் இலாபம், வாகனயோகம், கன்னியர் தொடர்பால் மானக்கேடு,திருடர் பற்றிய விழிப்புணர்வு,நோயினால் தேகசுகம் பாதிப்பு |
| தனுசு | நம்பியதனால் நட்டாற்றில் விடுதல்,கடன் கட்ட பூர்விகச் சொத்து விற்கும் யோசனை,வழக்கின் தீர்ப்பு சாதகமாதல்,சுவீப்பில் பணம். |
| மகரம் | சகோதர உறவில் விரிசல்,பங்கினைக் கைவிடும் உத்தேசம்,அகாலஉணவும் அலைச்சலும் தக்க வைத்தல்,கடன்பெற விண்ணப்பித்தல். |
| கும்பம் | முகவரியைத்தேடி அலைதல்,போக்குவரத்து விதியை மீறியதால் தண்டம்,வெளியூர் பயணம் கைவிடும் திட்டம், விஷஜெந்துக்கடி பற்றி எச்சரிக்கை. |
| மீனம் | இழுபட்ட விவாகம் நிறைவேறம் நிலைப்பாடு, கவறிங் நகை அணிந்து சென்றதால் தப்பிப் பிழைத்தல், பணமின்மையால் காசோலைகள் திரும்புதல். |



# என்னைவிட்டு ஓடிப்போக முடியுமா தங்கம்

(மொஸ்கோ)

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் 14ஆவது உலக தடகளப் போட்டிகள் நடைபெற்று வருகின்றது. இதில் 100 மீற்றர் ஓட்ட பந்தயத்தில் ஜமேக்கா வீரர் உசேன் போல்ட் தங்கப்பதக்கம் வென்று உலக அதிவேக வீரரானார். இரசிகர்கள் ஆவலோடு எதிர்பார்த்த மற்றொரு போட்டியான ஆண்கள் 200 மீற்றர் ஓட்டம் நேற்று முன்தினம் நடந்தது.

இறுதிச்சுற்றில் உலகின் தலைசிறந்த 8 வீரர்கள் பலப்பரீட்சையில் இறங்கினர். கோடிக்கணக்கான இரசிகர்களின் பார்வை உலகின் அதிவேக வீரரான போல்டின் மீதே இருந்தது. மின்னல் வேகத்தில் சீறிப்பாய்ந்த உசைன் போல்ட்டுக்கு யாரும் ஈடுகொடுக்க முடியவில்லை. பாதி தூரத்திற்கு பின்னர் தனி ஒருவராக முன்னிலை பெற்று 19.66 வினாடிகளில் பந்தய தூரத்தைக் கடந்து தங்கப்பதக்கத்தை முத்தமிட்டார்.

உலக தடகள போட்டிகளில் 200 மீற்றர் ஓட்டத்தில் அவர் தங்கப் பதக்கம் வெல்வது இது மூன்றாவது முறையாகும். ஜமேக்காவின் வோரன் வெய்ர் 19.79 வினாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், அமெரிக்காவின் கொர்டிஸ் மிட்செல் 20.04 வினாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கமும் வென்றனர்.

26 வயதான உசைன்போல்ட் ஒட்டுமொத்த உலக தடகள போட்டிகளில் நேற்று முன்தினம் வரை 7 தங்கப் பதக்கங்களை குவித்திருக்கிறார்.




# அம்மாக்களே கொஞ்சம் கவனியுங்கள்



(சிட்னி)

அவுஸ்ரேலியாவின் ரென்னிஸ் நட்சத்திரம் சமந்தா ஸ்டோசர், யு.எஸ்., கிராண்ட்ஸ்லாம் (2011) தொடரைக் கைப்பற்றியுள்ளார். உலக தரவரிசையில் 11ஆவது இடத்திலுள்ளார். இந்நிலையில், தனது பயிற்சியாளரான டேவிட் டெய்லரிடமிருந்து பிரிந்துள்ளார். புதிய பயிற்சியாளராக தனது நாட்டின் முன்னாள் வீராங்கனையான அலிசியா மோலிக்கை நியமித்துள்ளார்.

இது குறித்து ஸ்டோசர் வெளியிட்ட செய்தியில், கடந்த 6 ஆண்டுகளாக டேவிட் என் பயிற்சியாளராக இருந்து வந்தார். தற்போது இவரைப் பிரிய முடிவெடுத்துள்ளேன். யு.எஸ்., ஓப்பன் உள்ளிட்ட பல வெற்றிக்கு எனக்கு ஆதரவு அளித்தார். இனி அலிசியாவுடன் இணைந்து செயற்பட உள்ளேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாற்றங்கள் வருவதால் விறுவிறுப்பு கிரிக்கெட்டுக்குத்தான் உண்டு இந்தச் சிறப்பு



உலகில் எந்த விளையாட்டுக்கும் இல்லாத ஒரு சிறப்பு கிரிக்கெட்டுக்கு உள்ளது. இதில் மாற்றங்கள் வருவதால் அதன் விறுவிறுப்பும் அதிகரித்துள்ளது என இந்திய அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

கர்நாடக கிரிக்கெட் சங்கத்தின் 75ஆவது ஆண்டுவிழா பெங்களூரில் நடந்தது. இதில் இந்திய கிரிக்கெட்டின் மும்மூர்த்திகளாக வர்ணிக்கப்பட்ட சச்சின், ராவிட், கங்குலி ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் கருத்துத்தெரிவிக்கும் போதே சச்சின் டெண்டுல்கர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், உலகில் எந்த விளையாட்டுக்கும் இல்லாத ஒரு சிறப்பு கிரிக்கெட்டுக்கு உள்ளது. அதாவது இந்த விளையாட்டில் மட்டும் தான் மூன்றுவிதமான ஆட்டங்கள் (டெஸ்ட், ஒரு நாள், ருவென்ரி-20) உள்ளன. கிரிக்கெட்டில் மாற்றங்கள் கொண்டு வருவதால் விறுவிறுப்பு அதிகரித்துள்ளது. குறிப்பாக ருவென்ரி-20 போட்டியால் கிரிக்கெட்டில் விறுவிறுப்பு கூடியிருக்கிறது. மேலும் வீரருக்கு மட்டுமல்லாமல் இரசிகர்களுக்கும் எதிர்பார்ப்புகள் அதிகரித்திருக்கிறது. ருவென்ரி-20 போட்டியால் டெஸ்ட் போட்டிகளிலும் அதிக முடிவுகள் கிடைத்துள்ளன. ஒரு வீரர் அதிக ஓட்டங்களைக் குவித்தால் தேர்வாளர்கள் அவர் களைத் தேர்வு செய்யலாம்.ஆனால் அது எப்போதும் சாதகமாக இருக்காது. ஒரு வீரர் நெருக்கடியான நேரத்தில் எவ்வாறு ஆடுகிறார் என்பதை ஆராய்ந்து தேர்வு செய்ய வேண்டும். உள்ளூர் போட்டிகளில் சிலர் சிறப்பாக ஆடுவார்கள். ஆனால் சர்வதேச களத்தில் அவர்களால் அதே பங்களிப்பை கொடுக்க இயலாமல் போய் விடுகிறது. ருவென்ரி-20 போட்டியில் துடுப்பாட்ட வீரர்கள் துடுப்பை விளாசினாலே போதும். 3, 4 பந்துகளில் அவர்கள் ஹீரோ ஆகிவிடுவர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# சமரசம்




(ஹராரே)

ஊதிய உயர்வு கோரி பயிற்சி புறக்கணிப்பில் ஈடுபட்ட சிம்பாப்வே கிரிக்கெட் அணி வீரர்கள், கிரிக்கெட் சபையுடன் சமரசம் ஏற்பட்டதை அடுத்து போராட்டத்தை கைவிட்டனர்.

ஒப்பந்தத் தொகையுடன், களமிறங்கும் ஒவ்வொரு போட்டிக்கும் தனியே ஊதியம் வழங்க வேண்டும் என்பது உட்பட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து போராடிய சிம்பாப்வே வீரர்கள், சங்கம் ஒன்றையும் ஆரம்பித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இந்த நிலையில், இது தொடர்பாக நட்சத்திர வீரர்கள் பிரண்டன் டெய்லர், ஹமில்டன் மசகட்சா, எல்டன் சிகும்புரா, பிராஸ்பர் உத்செயா, வுசி சிபந்தா ஆகியோர் அடங்கிய குழுவினர், சிம்பாப்வே கிரிக்கெட் சபை நிர்வாகிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தினர்.

வீரர்களின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டகிரிக்கெட் சபை,ஊதிய உயர்வு பற்றிய விவரத்தை விரைவில் அறிவிப்பதாக உறுதியளித்தது. இதைத்தொடர்ந்து, சிம்பாப்வே வீரர்கள் போராட்டத்தைக் கைவிட்டு பயிற்சியைத் தொடங்கியுள்ளனர். இதனால், பாகிஸ்தான் அணியுடன் அடுத்தவாரம் இடம் பெறவுள்ள கிரிக்கெட் தொடருக்கு ஏற்பட்ட சிக்கல் முடிவுக்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சின்சினாட்டி ஓப்பன் இறுதியில் நடால்



அமெரிக்காவில் சின்சினாட்டி ஓப்பன் ரென்னிஸ் இறுதிப் போட்டிக்கு நடால் மற்றும் ஐஸ்னர் தகுதி பெற்றனர்.

சின்சினாட்டி ஓப்பன்ரென்னிஸ் போட்டி அமெரிக்காவில் நடைபெற்று வருகின்றது. இப்போட்டித் தொடரின் அரையிறுதி ஆட்டங்கள் நேற்று முன்தினம் நடைபெற்றன. முதலாவது அரையிறுதி போட்டியில் ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலும், செக்குடியரசு வீரர் தோமஸ் பெர்டிச்சும் மோதினர். போட்டி விறுவிறுப்பாக இருந்தது. முடிவில் நடால் 7-5, 7-6(4) என்ற செட் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு நுழைந்தார்.

மற்றொரு அரையிறுதிப் போட்டியில் அமெரிக்க வீரர் ஐஸ்னரும், ஆர்ஜென்ரீனா வீரர் ஜோன் மார்ட்டினும் மோதினர்.

இதில் 6-7(5), 7-6(9), 6-3 என்ற கணக்கில் ஐஸ்னர் வெற்றி பெற்று இறுதிப்போட்டிக்கு முன்னேறினார்.

# இது கங்குலியின் கனவு

(புதுடில்லி)

இந்தியாவின் சிறந்த டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிக்கான அணியை கங்குலி அறிவித்துள்ளார். இந்த இரண்டு அணியிலும் அவர் தனது பெயரை தேர்வு செய்துள்ளார்.

தற்போதைய வீரர்களில் ஹோலி, ஜடேஜா ஆகியோர் ஒரு நாள் போட்டிக்கான அணியில் இடம் பெற்றுள்ளார்கள். இரண்டு அணிக்கு யார் கப்டன் என்பதை கங்குலி தெரிவிக்கவில்லை.

கனவு அணி என்பது எங்கள் மனதில் எழும் ஒரு தெரிவு. அந்த வகையில் எனது மனதில் தெரிவானது இந்த அணி. எனது கனவு அணியில் இடம் இல்லை என்பதற்கான அவர்கள் சிறந்த வீரர்களாக கருதவில்லை என யாரும் வருத்தப்படவேண்டும் எனக் கங்குலி தெரிவித்துள்ளார்.

ஒருநாள் போட்டி: டெண்டுல்கர், கங்குலி, சேவாக், ஹோலி, ராவிட், யுவராஜ்சிங், டோனி, கபில்தேவ், ரவிந்திர ஜடேஜா, கும்ளே அல்லது ஶ்ரீநாத், சகீர்கான்.

டெஸ்ட்: கவாஸ்கர், சேவாக், ராவிட், டெண்டுல்கர், கங்குலி அல்லது குண்டப்பா விஸ்வநாத், டோனி, கபில்தேவ், ஹர்பஜன்சிங், கும்ளே, ஶ்ரீநாத், சகீர்கான் 12ஆவது வீரர் வி.வி.எஸ்.லட்சுமண்.

இதேவேளை, அண்மையில் கபில்தேவ் தனது இந்தியா கனவு அணியை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# வதிரி ஸ்ரீமுருகன் வசம் கிண்ணம்



(நெல்லியடி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் தொடரில் வதிரி ஸ்ரீமுருகன் அணி த்ரில் வெற்றிபெற்று கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது.

வடமராட்சிப் பிரதேச அணிகளுக்கிடையில் மைக்கல் விளையாட்டுக்கழத்தினால் நடாத்தப்பட்ட 10 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை மைக்கல் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

அதில் வதிரி ஸ்ரீமுருகன் அணியும், நெற்கழுகு அணியும் மோதின. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய நெற்கழுகு அணி 10 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 94 ஓட்டங்களைப்பெற்றது. இதில் கோகுலன் 39, செந்தூரன் 30 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் நெஸ்மன் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பதிலுக்கு 96 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கி வதிரி ஸ்ரீமுருகன் அணி இறுதிப் பந்தில் வெற்றியிலக்கை அடைந்தது. இறுதியில் வதிரி ஸ்ரீமுருகன் அணி 10 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் ராஜ்குமார் 23, அரிகரன் 16, உமாசுதன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் கோகுலன் இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்ரீமுருகன் அணியைச் சேர்ந்த ராஜகுமார், தொடர் ஆட்டநாயகனாக நெற்கழுகு அணியைச் சேர்ந்த கோகுலன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (17)

## விளையாட்டுச் செய்திகள்

## வெற்றிக்காகப் போராடுவோம்

தொடரை இழந்தது பெரும் ஏமாற்றம்தான். இருப்பினும் இறுதி டெஸ்ட் போட்டியில் வெற்றியைப் பெறும் முனைப்புடன் அணி வீரர்கள் போராடுவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது என அவுஸ்ரேலிய அணியின் பயிற்றுநர் லீமன் தெரிவித்துள்ளார்.

நான்காவது போட்டியில் வெற்றிக்கான அதிக வாய்ப்பு எமது பக்கம் இருந்தது. குறிப்பாக, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் வலுவான தொடக்கத்தை அணிக்குப் பெற்றுக் கொடுத்தனர். தொடர்ந்து களமிறங்கிய வீரர்களால் அதனைத் தக்கவைத்துக் கொள்ள முடியாமல் போனது அதிர்ச்சியே. இப்போட்டியில் வெற்றிபெற்றிருந்தால் நிச்சயம் தொடரைச் சமன் செய்திருக்கலாம். அது முடிந்துபோன நிகழ்வாகிவிட்டது. இருப்பினும் இறுதி டெஸ்ட் போட்டியில் வெற்றிபெற்றுக்கொள்வோம் என்று நம்புகின்றேன். வீரர்கள் பொறுப்பை உணர்ந்து ஆட வேண்டும். இனிவரும் காலங்களில் அவர்கள் அதனை உரிய முறையில் செய்வார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கிண்ணம் வென்றது நாச்சிக்குடா சென். மேரிஸ்

(முழங்காவில்)

வலைப்பாடு ஜெயமீட்பர் விளையாட்டுக்கழகம் வடமாகாண கால்பந்து அணிகளுக்கிடையில் நடாத்திய கால்பந்துப் போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

வலைப்பாடு ஜெயமீபர் விளையாட்டுக்கழகம் கடந்த 26,27,28,29ஆம் திகதிகளில் வடக்கு மாகாண கால்பந்து அணிகளுக்கிடையில் மாபெரும் கால்பந்துப் போட்டியை நடாத்தியது.

20இற்கும் மேற்பட்ட அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடர் வலைப்பாடு ஜெயமீட்பர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதன் இறுதிப் போட்டிக்கு நாச்சிக்குடா சென். மேரிஸ் மற்றும் கிளிநொச்சி திருநகர் அணிகள் மோதின. இதில் இரு அணிகளுமே ஒன்றுக்கு ஒன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் தமது ஆட்டத்திறனை வெளிப்படுத்தின. இறுதி வரை பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில் நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றிக் கொண்டது. (112)

## மட்டுவில் வளர்மதி, கச்சாய் ஸ்ரீமுருகன் காலிறுதிப் போட்டிக்கு முன்னேற்றம்

(மட்டுவில்)

மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழகத்தினால் நடாத்தப்பட்டுவரும் பிரதேச மட்ட கரப்பந்தாட்டத் தொடரின் காலிறுதிப் போட்டிக்கு மட்டுவில் வளர்மதி, கச்சாய் ஸ்ரீமுருகன் அணி தகுதி பெற்றுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழகம் மாபெரும் கரப்பந்தாட்டத் தொடரை விலகல் முறையில் நடாத்தி வருகின்றது.

மின்னொளியில் நடைபெற்று வரும் இப்போட்டித் தொடர் மட்டுவில் ஜங்கரன் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் நேற்று முன்தினம் இரு போட்டிகள் நடைபெற்றன. இதில் முதலாவது போட்டியில் மட்டுவில் கண்ணகை அணியும், மட்டுவில் வளர்மதி அணியும் மோதின. இதில் மட்டுவில் வளர்மதி அணி 2-1 என்ற செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கச்சாய் ஸ்ரீமுருகன் அணியும், மட்டுவில் மோகனதாஸ் பி அணியும் மோதின. இதில் கச்சாய் ஸ்ரீமுருகன் அணி 2-0 என்ற நேர் செட் கணக்கில் வெற்றிபெற்று காலிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

இதேவேளை, இன்றைய தினம் இடம்பெறவுள்ள போட்டியில் மீசாலை சீமா ஏ அணியும், கைதடி சித்தி விநாயகர் அணியும் மோதவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின்னொளியில் இப்போட்டி இடம்பெறுவதால் அதிகளவிலான இரசிகர்கள் போட்டியைக் கண்டு களித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெற ஏற்பாடாகியுள்ளதாகவும், இப்போட்டியில் வெற்றிபெறும் அணிக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்களும் வழங்கப்படும் எனவும் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (118)



கோண்டாவிலில் இயங்கும் சிறுவர் உலக பாலர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் முன்பள்ளி முன்றலில் சிறப்புற நடைபெற்றது. இதில் சிறார்களின் வண்ணமயமான பல விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் வினோத உடை போட்டி நிகழ்வு அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருந்தது. போட்டியில் பங்குகொண்ட அனைத்து சிறார்களுக்கும் பரிசில்கள் வழங்கிக்கௌரவிக்கப்பட்டது. கோப்பாய் பிரதேச ஆரம்பப் பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் பி. பத்மகுமார தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக ஓய்வுநிலை யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் க. விமலநாதன் உட்பட பலர் கலந்து கொண்டு போட்டியைக் கண்டு களித்தனர். இப்போட்டி நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், வினோத உடை நிகழ்வையும், சிறார்களின் விளையாட்டு நிகழ்வையும் காணலாம். (எஸ்.பி.)

# கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் வருடாந்த ம

## கிளிநொச்சி கந்தன் அருள் பொலியட்டும்

கிளிநொச்சி நகரில் அருள்பாலித்தவாறு வீற்றிருக்கும் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா உற்சவம் வெகுவிமரிசையாக நடைபெறுவதையிட்டு மிக மகிழ்ச்சியடைகிறேன். மக்கள் தங்கள் சொந்த ஊர்களில் நிம்மதியாகவும், மகிழ்ச்சியாகவும் வாழ்வதற்கு கண்ட கனவு இன்று நனவாகி வந்துள்ளதற்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா ஒரு நல்ல உதாரணமாகும்.

கிளிநொச்சி நகர் மீண்டும் பொலிவுபெற்று அழகோடு மிளிர்கிறது. இப்பொழுது கிளிநொச்சி கந்தனும் புதுப்பொலிவு பெற்று காட்சியளிக்கின்றான். கிளிநொச்சி மாவட்டத்தின் பெருமை மிகு ஆலயமாக இராஜ கோபுரத்துடன் எழுச்சியடைந்துள்ள கந்தசுவாமி கோவில் கிளிநொச்சி மக்களின் வாழ்விலும் அவர்களுடைய உணர்விலும் இரண்டறக் கலந்தது. மக்கள் வாழ்வின் எழுச்சியைப் போல கந்தனின் எழுச்சியும் இரண்டறக் கலந்திருப்பது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

புத்தெளிச்சியுடன் புதுயுகம் காணும் எமது வரலாற்றுப் பயணத்திற்கு கிளிநொச்சி கந்தனின் அருளாசி கிடைக்கட்டும்.



**முருகேசு சந்திரகுமார்,**
**நாடாளுமன்ற உறுப்பினர்,**
**நாடாளுமன்றக் குழுக்களின்**
**பிரதித் தலைவர்.**

## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவா

ஈழமணித்திருநாட்டின் வடபகுதியில் கிளிநொச்சி மாவட்டம் கலையும், கலாசாரமும்,சைவமும், தமிழு பின்னிப்பிணைந்து காணப்படும் ஓர் மாவட்டம் ஆகும். சைவத்தின் சிறப்பைப் பறை சாற்றும் பல கோயில்கள் காணப்பட முருக வழிபாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் விதத்தில் நகரை அ ஆலயமாக கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி ஆலயம் விளங்குகின்ற ஆலய பரிபாலன சபையினர் கட பலவருடங்களாக பெருந்திருப்பண மேற்கொண்டு அவற்றைச் சிறப்புற நிறைவேற்றி வருகின்றனர். அந்த வகையில் இவ்வாண்டும்




### கிளிநொச்சி நகரில் .....

- உயர்தர கலர் போட்டோக்கொப்பி High Quality Colour Photo Copy
- உயர்தர கலர் பிறிண்ட் High Quality Colour Print
- லெமினேற்றிங் Laminating
- பக்ஸ் அனுப்புதல் Fax
- ஈமெயில் அனுப்புதல் E.mail
- இணையப் பாவனை Net Browsing
- முகம்பார்த்து கதைத்தல் Skype
- ஸ்கானிங் Scanning
- சீடி றைற்றிங் CD Writing
- கணினி தட்டச்சு, பக்க வடிவமைப்பு Computer Typing, Page Setup
- வாழ்த்து மடல்கள் வடிவமைப்பு Greeting Cards Designing
- விசிற்றிங்காட், சான்றிதழ்கள், அழைப்பிதழ்கள் வடிவமைப்பு Visiting Cards, certificates, Invitation Creating
- புத்தகம் கட்டுதல் Book Binding

skype Maxico
மக்சிகோ
All Kind OF Computer Printing Work & Net Browsing
சகல விதமான கணினி பிறிண்டிங் வேலைகள், இணையத்தள பாவனை.
Opp - To Kachcheri, A9 Road, Kilinochchi. கச்சேரி முன்பாக, A9 வீதி, கிளிநொச்சி.
Phone & Fax : 0212285608. E.mail: maxico5608@hotmail.com
C/1958


## வாழ்த்துச் செய்தி

வடபுலத்தில் பிரசித்தி பெற்ற முருகன் ஆலயங்களில் மாவிட்டபுரக் கந்தனை அபிடேகக்கந்தன் என்றும், நல்லூர்க் கந்தனை அலங்காரக்கந்தன் என்றும், சந்நிதிக்கந்தனை அன்னதானக்கந்தன் என்றும் அழைக்கின்றோம் அதுபோல் கிளிநொச்சிநகரின் மத்தியில் உறைந்திருக்கும் இக் கந்தப்பெருமானை கலாசாரக்கந்தன் என்றும் அழைக்கலாம் போன்றும் தோன்றுகின்றது. கலாசார பெறுமானங்களை சீராக பின்பற்றி நடாத்தப்படும் இத்தேர்த்திருவிழாவினை ஒரு முருகன் அடியவனாக நின்று அடியேனும் முருகனுடைய அருளைப்பெற விளைகின்றேன். அத்துடன் திருவிழாவினை முன்னிட்டு சிறப்பிதழினை வெளியிடும் பத்திரிகை நிறுவனத்துக்கும் எனது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.



**திரு கோ.நாகேஸ்வரன்**
**பிரதேசசெயலாளர்**
**பிரதேசசெயலகம்**
**கரைச்சி.**


வவுனியா ஒப்டிகல்
ඇස් කණ්ණාඩි
VAVUNIYA OPTICAL
கண் கண்ணாடி அகம்
இற்றிலும் இலவசமாகக் கண் பரிசோதிக்கப்பட்டு சிறந்த வகையில் கண்ணாடி வழங்கப்படும்.
நீண்ட காலமாக மக்களின் நன்மதிப்பைப் பெற்ற வவுனியா ஒப்டிகல் தற்போது கிளிநொச்சி மக்களுக்காக கனகபுரம் வீதியில் அமைந்துள்ளது.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி. Tel:- 021 4925972
No-30, Bus Stand, Complex, Vavuniya. Tel: 021 4925971
C/1959

ST ANTHONY 'S
Supply Center
Mullaitivu Road,
Paranthan Junction.
Paranthan.
மின் இணைப்புகள்/
பெயின்ற் வகைகள், T.V.C.குழாய்கள், மற்றும் கட்டடத்திற்கான சகல பொருட்களும் இங்கே பெற்றுக்கொள்ளலாம்.
TP:- 0773048648
C/1960

அப்பன் உதிரிகள் வாணிபம்
Appan Spare Parts
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
Kanagapuram Road, Kilinochchi.
சகல வகையான வாகனங்களின் உதிரிப்பாகங்கள், டயர்கள், ஒயில்வகைகள், மோட்டார் சைக்கிளிற்குரிய அனைத்து உதிரிப்பாகங்களும் பெற்றுக்கொள்ளலாம்.
TP:- 024 3248447
C/1952

கலைமகள் அழகுசாதனம், பாதணிகள்
Kalaimagal Fancy House
டிப்போ வீதி, இல.02 கனகபுரம், கிளிநொச்சி
Dippo Road, No-02 Kanagapuram, Kilinochchi.
சகல வகையான அழகுப் பொருட்கள், இயந்திர உபகரணங்கள் , பாதணிகள், விளையாட்டுப்பொருட்கள் அன்பளிப்புப் பொருட்கள், ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பந்தலுக்கான அழகூட்டும் பொருட்களும் வாடகைக்கு வழங்கப்படும்.
T.P:- 021 4914266
C/1954

கிளிநொச்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்
Palm Development Co-Op Society-Kilinochchi.
சிறந்த தரமான சுத்தமான பனங்கட்டிகள் (வெல்லம்),
ஒடியல் மா, புழுக்கொடியல், ஜாம்
மற்றும் பனம் பொருள் உற்பத்திப்பொருட்கள்
என்பன விற்பனை செய்யப்படுகின்றன.
இப்போது A-9 வீதி, கரடிப்போக்கில் மக்களுக்காக திறக்கப்பட்டுள்ளது.
C/1950

# ... மகோற்சவ இரதோற்சவ சிறப்புமலர் – 2013

## ...தசுவாமி ஆலய தேர்த்திருவிழா வாழ்த்துச்செய்தி

...ிநொச்சி
...ழும், தமிழும்
... மாவட்டம்
...பப் பறை
... காணப்பட்டாலும்
...மையைப்
... நகரை அண்மித்த
... அருள்மிகு
...ிளங்குகின்றது.
...யினர் கடந்த
...ந்திருப்பணிகளை
...றச் சிறப்புற
...னர். அந்த
...ம்

கொடியேற்றமும்,இரதோற்சவமும் உள்ளடங்கிய மகோற்சவப் பெருவிழா இடம்பெறுகின்றமை சிறப்புக்குரியதாகும்.

எம்கந்தப் பெருமானின் பரிபூரணத்துவமான திருவருள் கிடைக்கும் மகோற்சவத்தின் சிகரமாய் திகழும் தேர்த் திருவிழாவான இன்று முருகப்பெருமான் அழகிய தேரில் எழுந்தருளும் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதுடன் அனைவரும் இன்பமாய் வாழ எல்லாம் வல்ல அருள்மிகு கந்தசுவாமி அருள்புரிய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.



**செ. ஸ்ரீநிவாஸன்,**
**மேலதிக அரசாங்க அதிபர்,**
**மாவட்டசெயலகம்,**
**கிளிநொச்சி.**



## தேரேறும் திருமுருகன் திருவருள் பெற வாரீர்...

குன்றின் மேல் நிற்கும் குமரன் கோவில்களுக்கு ஈழமணித்திருநாட்டில் பஞ்சமில்லை எனும் அளவுக்கு குமரக்கடவுள் ஒவ்வொரு ஊரிலும் அமர்ந்து அடியார்களை இரட்சித்து வருகிறார் இந்த வகையில் கிளிநொச்சி மாநகரின் மத்தியிலே அமர்ந்து சொல்லொணாத் துன்பக்கடலில் மூழ்கி தத்தளித்து வரும் அடியவர்களை காப்பாற்றி காத்தருளும் கந்தசுவாமி பெருமானின் தேருலா பவனி கிடைத்தற்கரிய கண் கொள்ளாக்காட்சி ஆகும். எனவே எம் பெருமானின் முத்தேர் இரதபவனி கண்டு, களிப்புற்ற திருமுருகனின் திருவருள் கடாட்சத்தினை பெற்றுய்யும் வண்ணம் ஆசிர்வதித்து பிரார்த்திக்கின்றேன்.

சுபமஸ்து



**சிவஸ்ரீ**
**ஜெக. ஜெகதீஸ்வரக்குருக்கள்**
**ஆதீன பரம்பரை**
**மகோற்சவ குரு,**
**கந்தசுவாமி**
**தேவஸ்தானம்,**
**கிளிநொச்சி.**

## மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

கிளிநொச்சி மாநகரில் அழகாக வீற்று அருளாட்சி செய்து வரும் முருகப்பெருமானின் மகோற்சவத்திலே இரதோற்சவம் ஆனது மிகவும் சிறந்தது அனைத்து உயிர்களுக்கும் அருள் பெறும் சாம்பலி தீட்சையே இரதோற்சவம் ஆகும். எம் முன்னோர் வழிபட்டு அருட்செல்வம் பெற்ற கிளிநொச்சி முருகனின் அருளை பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்து முத்தி இன்பம் பெற வேண்டும். என்றும் இரதோற்சவம் சிறப்புற நடைபெற முருகப்பெருமானின் பாதாரவிந்தங்களை பணிந்து நல்லாசி கூறுகிறேன்.

சுபமஸ்து



**ஆலய ஆதீன பரம்பரை**
**பிரதமகுரு கிரியா**
**சிரோன்மணி**
**ஜெக. ஜெயந்தன்**
**குருக்கள்**
**கந்தசுவாமி கோவில்**
**கிளிநொச்சி.**


ரூபன் ஸ்ரூடியோ
போட்டோ அன் வீடியோ
முல்லை வீதி, பரந்தன்.
Mullai Road, Paranthan.
Rupan Digital Photo & Video
நவீன வடிமைப்புக்களுடன் டிஜிற்றல் அல்பம், கரிஸ்மா அல்பம், டீறோ பிறேம், அனைத்தும் விரைவாக செய்து கொடுக்கப்படும்.
TP:- 0770764006
C/1962

வேழன் பதிப்பகம்
Velan Printers
Kanakapuram Road, Kilinochchi.
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
டிஜிற்றல் கலர் பிறின்ட், போட்டோக்கொப்பி, றபஸ்ராம், லெமனேற்றிங், நவீன முறையிலான திருமண அழைப்பிதழ் காட் வகைகள் மற்றும் கணினி மூலம் வடிவமைக்கப்பட்டு ஒப்செற் மிசினில் அச்சிட்டு விரைவில் பெற்றுக்கொள்ளலாம்.
C/1961
TP:- 021 228 5579

கல்பனா (சைவ) உணவகம்
Kalpana (Saiva) Unavagam
Opp. Kandasami Temple
A-9 Road, Kilinochchi.
காலை, மதியம், இரவு உணவுகள் சுகாதார முறைப்படி சமைத்து வழங்குவதில் கைதேர்ந்தவர்கள்
சைவ முறைப்படி சமைத்த உணவுகள் ஓடர் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
C/1956

Javeeshana book shop
ஜவீசனா புத்தகசாலை
இல.09 யாழ் வீதி பரந்தன் சந்தி, கிளிநொச்சி.
No-09 Jaffna Rd, Paranthan Junction, Kilinochchi.
சகல விதமான புத்தகங்களும், பத்திரிகைகளும், பாடசாலை உபகரணங்களும் பான்சிப் பொருட்களும் மற்றும் திருமண, பூப்புனித நீராட்டு விழா அழைப்பிதழ்கள் தரமான டிசைன்களில் செய்து ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.
C/1953
TP:- 077 2367414

குறிஞ்சி மலர் அழகு நிலையம்
Kurinchimalaur Saloon
கத்தரிக்கோல், தையல் கத்தரிக்கோல், கட்டர் சாணைபிடித்து கொடுக்கப்படும்.
A9 வீதி, முருகன் கோவில் முன்பாக கிளிநொச்சி.
A9 Road, Infornt Murugan Temple Kilinochchi.
C/1957

பாரதி உணவகம்
Barathi Hotel
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
Kanagapuram Road, Kilinochchi.
சகல வகையான உணவுகள், குளிர்பானங்கள் மற்றும் உங்கள் வீட்டில் நடைபெறும் நிகழ்வுகளுக்கும் இங்கு ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.
TP:- 021 2285370 / 0775510707
C/1951

கரைச்சி தெற்கு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)
(மெகா கோப்சிற்றி) MEGA CO-OP CITY
கனகபுரம் வீதி, கிளிநொச்சி.
Kanagapuram Road, Kilinochchi.
தங்களுக்கான தேவையினை ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ள முற்றிலும் குளிரூட்டப்பட்ட அதிநவீன வசதிகளுடன் தினமும் காலை 8.00 மணிதொடக்கம் மாலை 9.00 மணிவரையும் உங்களுக்கான சேவை இங்கே!
இல்லத்தேவை எங்கள் சேவை
→ பொதி செய்யப்பட்ட உணவுப்பொருட்கள்
→ பாடசாலை காகிதாகிகள், உபகரணங்கள்
→ சிறுவர்களுக்கான விளையாட்டுப்பொருட்கள்
→ அன்பளிப்புப் பொருட்கள்
→ பால்மா வகைகள்
→ மரக்கறி வகைகள்
→ இறைச்சி வகைகள்
→ இலகு கடன் சேவை வசதி (நிபந்தனைக்குட்பட்டது)
→ வீட்டில் இருந்தவாறே பொருட்களை கொள்வனவு செய்யும் வசதி
C/1949

# யானை வந்தால் ஆளைக் கொல்லும்... அவ்வளவு தானே!

'பூதக்கண்ணாடி' லோஹிததாஸின் இயக்கத்தில் மிக அதிகம் பேசப்பட்ட படம். நல்ல இசை, மம்முட்டியின் அற்புத நடிப்பு, பாம்பு குறியீடுகள் என பல விசயங்கள் இருந்தாலும் படம் எனக்குள் தூண்டிய கேள்வி பைத்தியம் சம்பந்தப்பட்டது.

பொதுவாக பைத்தியமாதலை ஒரு கடும் அதிர்ச்சியால் மனம் மீள முடியா வண்ணம் கலங்கிப் போவதாக படங்களில் காட்டுவார்கள். அல்லது பைத்தியம் கொண்டவர்கள் பல்வேறு பிரமைகளில் சிக்கி இருப்பார்கள் விளைவாக தனிமைப்படுவார்கள், அல்லது கொலை செய்வார்கள். நிஜ வாழ்க்கையில் நிறையப் பேர் தற்கொலை செய்வார்கள்.



- ஆர் அபிலாஷ்

அறிவியலில் நமக்கு பொதுவாக உள்ள விளக்கம் பைத்தியம் என்பது ஒரு விஷயத்தை வேண்டுமென்றே சிக்கலாக்கி குழப்பிக் கொள்வது அதனால் அவஸ்தைப்படுவது; பைத்தியமற்றவர்கள் விஷயங்களை தெளிவாக்கி தர்க்கரீதியாக பார்ப்பார்கள். பொதுவாக நாம் இரண்டுக்கும் இடைப்பட்டு இருக்கிறோம்.

இன்னும் சொல்வதானால் பைத்தியம் ஒருவனை வாழ்வின் ஏமாற்றங்களை, அதன் வலியை தாங்க முடியாதவனாக்குகிறது. அவர்கள் வலியை தாமாக பன்மடங்கு பெருக்குகிறார்கள். வலியை பெருக்கி எங்கிருந்தோ தப்பித்துப் போக பார்க்கிறார்கள். எதனிடம் இருந்து? வலியிடம் இருந்து தான். அதாவது நமக்கு காமம் போதவில்லை என்றால் போர்னோ அல்லது பகற்கனவு மூலம் மிகையான காமத்தை நாடுவோம். அதே போல் அரசியலிலும் எதார்த்தம் தாங்க முடியாத நிலையில் நாம் கருத்தாக்கங்கள், இலக்குகளை மிகையாக்கி இலட்சியவாதத்தில் நிழல் தேடுவோம். ஒவ்வொரு முறையும் மிகைப்படுத்துகையில் தப்பிக்கவே முயல்கிறோம்.

வலியை தீர்க்க வழி உண்டு. ஒன்று தர்க்கரீதியாய் தீர்வை தேடலாம். அல்லது தானே சரியாகும்படி விட்டு விடலாம். ஆசியர்கள் பொதுவாக இரண்டாவது வழியை தான் தேர்கிறார்கள். தானே சரியாகும் வரை நாம் கடுமையான மன நெருக்கடியை, ஸ்திரமின்மையின் பதற்றத்தை சந்திக்க வேண்டி வரும்.

ஆனால் மனிதனுக்கு என்றுமே இதையிரண்டையும் கடந்து மேலெழும் சக்தியை இயற்கை வழங்கி உள்ளது. இங்கு தான் நாம் பொதுவாக உளவியலில் இருந்து மாறுபட வேண்டும். மனிதன் சுயமுனைப்பற்ற ஆட்டுக்குட்டி அல்ல.

என்னைப் பொறுத்த வரையில் முக்கிய காரணம் பயம் தான். பயம் எங்கிருந்தோ வந்து நம்மில் தொற்றிக் கொள்கிறது. 'பூதக்கண்ணாடி' படத்திலும் நாயகன் சதா எதைக் கண்டும் பயப்படுகிறவனாக இருக்கிறான். பயம் அவனை பலவீனப்படுத்துகிறது.

பூதக்கண்ணாடி என்றால் நுண்பெருக்கி. நாயகன் கைக்கடிகாரம் பழுதுபார்ப்பவன். அவன் ஒரு கண்ணில் மாட்டுகிற நுண்பெருக்கியை பயன்படுத்துகிறான். ஒரு கட்டத்தில் அச்சம் காரணமாக அவன் வாழ்வின் எல்லா அம்சங்களையும் நுண்பெருக்கி கொண்டு பார்க்க விழைகிறான். ஒரு நுண்பெருக்கியை வைத்து புத்தகம் வாசிப்பது போல இது. களைத்து விடுவீர்கள். அதே நுண்பெருக்கியை வைத்து உலகை பார்க்க முயன்றால் நாம் ஒரு ஒட்டுமொத்த சித்திரத்தை இழக்கிறோம். இறுதியில் நாயகன் பைத்தியம் முற்றி தன்னையே மறந்து சதா நுண்பெருக்கி வழி உலகை பார்த்தபடி இருக்கிறான்.

வாழ்க்கையை புரிவதன் முக்கிய இலக்கு தெளிவு. வாழ்வை நுண்மையாக பார்க்கையில் தெளிவை இழக்கிறோமா? இது முக்கிய கேள்வி. ஆழமான விவாதங்களுக்கு இட்டுச் செல்லக் கூடியது.

நமக்கு காமம் போதவில்லை என்றால் போர்னோ அல்லது பகற்கனவு மூலம் மிகையான காமத்தை நாடுவோம். அதே போல் அரசியலிலும் எதார்த்தம் தாங்க முடியாத நிலையில் நாம் கருத்தாக்கங்கள், இலக்குகளை மிகையாக்கி இலட்சியவாதத்தில் நிழல் தேடுவோம். ஒவ்வொரு முறையும் மிகைப்படுத்துகையில் தப்பிக்கவே முயல்கிறோம்.வலியை தீர்க்க வழி உண்டு. ஒன்று தர்க்கரீதியாய் தீர்வை தேடலாம். அல்லது தானே சரியாகும்படி விட்டு விடலாம். ஆசியர்கள் பொதுவாக இரண்டாவது வழியை தான் தேர்கிறார்கள்.

நுட்பத்துக்குள் செல்வது அவசியம். அது உங்களை பைத்தியமாக்காது. ஒரு துறை சார்ந்த சிந்தனை, ஆய்வில் இதை செய்யலாம். வாழ்விலும் மிக மிக நுட்பமாக எல்லாவற்றையும் ஆராயலாம். அதனால் வழி தவற மாட்டீர்கள். ஆனால் இதன் முக்கியமான அடிப்படை என்னவென்றால் கவலை, அச்சம் ஆகிய உணர்ச்சிகள் உங்களை வழிநடத்தக் கூடாது என்பது. கறாரான தர்க்கமும் தோல்வியை ஏற்கும் மனநிலையும் இருந்தால் நுட்பமான பார்வை உங்களுக்கு பெரும் வரமாகவே இருக்கும். நீங்கள் சித்தராகி விடுவீர்கள். கொஞ்சம் தோல்விக்கு தயாராக நாம் முடிவுகள் எடுப்பதானால் பயம் மறையும். தெளிவு கிடைக்கும் வலி குறையும் எங்களூரில் ஒரு பழமொழி உண்டு. பிரச்சினைகளின் போது அடிக்கடி அதை நினைத்துக் கொள்வேன்: 'யானை வந்தால் ஆளைக் கொல்லும் மயிரையா பிடுங்கும்'.

# மரியான்: மாற்று சினிமாவின் பாவனை



சிறந்த நடிகர்கள், தொழில்நுட்பக்கலைஞர்கள், பெரிய பட்ஜெட், வெளிநாட்டுக் காட்சிகளின் மாய்மாலங்கள், இலக்கியவாதிகளின் பங்களிப்புகள், உண்மைச் சம்பவம் அடிப்படையில் உருவான கதை போன்றவற்றை மாத்திரம் வைத்துக் கொண்டு ஒரு சிறந்த திரைப்படத்தை தந்து விட முடியாது என்பதற்கான சமீபத்திய உதாரணம் 'மரியான்'. எவ்வித முன்திட்டங்களுமல்லாமல் படப்பிடிப்புத் தளத்திற்கு சென்ற பிறகுதான் 'சீன்' யோசிக்கும் அதிசய இயக்குநர்களுக்கு மத்தியில் bounded script வைத்து கறாராக திட்டமிட்டாலும் இயக்குநர் நினைத்தபடியான இறுதி வடிவம் வருவது என்பது மாத்திரமல்லாமல் அதுவொரு சிறந்த சினிமாவுமாக ஆவதும் கூட ஒரு தற்செயலான விஷயமாக அமைவதில் ஏதோ ஒரு மாயமிருக்கிறது. சினிமா என்பது பல கலைஞர்களின் கூட்டு உழைப்பால் நிகழ்வது என்பதால் இயக்குநரின் முழுக் கட்டுப்பாட்டில் அந்தக் குழுவே ஒத்த அலைவரிசையில் இயங்கினால் தான் ஒரு நல்ல சினிமா உருவாக முடியும்.

மரியானில் துண்டு துண்டாக சில அற்புதமான கணங்கள் உள்ளன. ஆனால் முழுமையான வடிவத்தில், பொருளுக்காக குடும்பத்தை துறந்து புலம் பெயர்ந்துள்ளவர்களின் துயரங்களை பிரதிநிதித்துவப் படுத்தும் ஒரு சிறந்த சினிமாவாக மலரும் வாய்ப்பை

- சுரேஷ் கண்ணன்

தவற விட்டு விட்டதில் எல்லாமே வீண். மரியானின் மிகப் பெரிய பலவீனம் திரைக்கதை. ஒரே நிலையில் தேங்கிக் கொண்டிருந்தால் அது சிறந்த திரைக்கதையல்ல. பல்வேறு கிளையாக பிரிந்து ஒரு மைய இழையை நோக்கி நகர்ந்து கொண்டேயிருப்பதே சுவாரசியமான திரைக்கதையின் அடிப்படையாக இருக்கும். சாவகாசமான டைம்லைனில் எடுக்கப்படுவதுதான் மாற்று சினிமா என்பது ஒரு மாயை. வேகமாக நகரும் திரைக்கதையின் மூலமும் ஒரு நல்ல திரைப்படத்தை உருவாக்கலாம். இரானிய திரைப்படமான A Separation - ஓர் உதாரணம். இன்னொரு பலவீனம் அழுத்தமேயில்லாத பாத்திரங்களின் வடிவமைப்பு.

தனுஷ் - ஆடுகளம் மூலமாக தேசிய விருதின் வெளிச்சம் இவர் மீது விழுந்த பிறகு தேசிய சினிமாவிற்கு நகர்ந்திருப்பது மகிழ்ச்சி. ஆஸ்கர் விருதை நோக்கி சிறந்த நடிகராகவே ஆவது என்கிற வெறித்தனத்துடன் இருக்கிறார் என்பது தெரிகிறது. சில காட்சிகளில் இவரது உடல்மொழியும் வசனமும அற்புதமாக இருந்தாலும் (ஆரம்பக் காட்சியில் தொலைபேசிக் கட்டணத்தை பார்த்துக் கொண்டே காதல் பொங்க பேசுவது உதாரணம்) பல காட்சிகளில் செயற்கையாகத் தோன்றுவதற்கு திரைக்கதையின் பலவீனமே காரணம். கமல் தேசிய விருது பெற்று சிறந்த நடிகர் என்று நிறுவப்பட்ட பிறகு நாயகனில் அவர் வாந்தியெடுப்பது போல் அழுவதையே ஒரு கிளிஷேவாக தொடர்ந்து தொலைக்காட்சிகளில் காட்டி வெறுப்பேற்றுவார்கள். அப்படியே தனுஷுக்குமான காட்சிகளும் இதிலுண்டு.

மரியானில் துண்டு துண்டாக சில அற்புதமான கணங்கள் உள்ளன. ஆனால் முழுமையான வடிவத்தில், பொருளுக்காக குடும்பத்தை துறந்து புலம் பெயர்ந்துள்ளவர்களின் துயரங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சிறந்த சினிமாவாக மலரும் வாய்ப்பை தவற விட்டு விட்டதில் எல்லாமே வீண். ஒரே நிலையில் தேங்கிக் கொண்டிருந்தால் அது சிறந்த திரைக்கதையல்ல. பல்வேறு கிளையாக பிரிந்து ஒரு மைய இழையை நோக்கி நகர்ந்து கொண்டேயிருப்பதே சுவாரசியமான திரைக்கதையின் அடிப்படையாக இருக்கும்.

பார்வதியும் அப்படியே. கலைடாஸ்கோப்பின் வழியாக பார்ப்பது போல் இவர் முகத்தில் பல்வேறு உணர்ச்சிகள் மின்னல் இடைவெளியில் மாறி மாறி தோற்றமளிக்கின்றன. எனவேதான் ஒளிப்பதிவாளர், மிக தைரியமாக இருவருக்கும் மிக நெருக்கமான அண்மைக் கோண காட்சிகளை பயன்படுத்தியுள்ளார் என்று தோன்றுகிறது. அழுகின்ற காட்சிகளில் எம்.ஜி.ஆர் ஏன் முகத்தை மூடிக் கொள்கிறார் என்று யோசிக்கும் போதுதான் குளோசப் காட்சிகளில் நடிக்கும் சிரமமும் அதன் தகுதியும் தெரியும்.

காதல், பிரிவு, உயிர்த்தெழுதல் போன்ற உணர்வுகளைப் பற்றின படம் என்று படத்தின் அறிவிப்புகள் முழங்கினாலும் சில விடுபடல்களைத் தவிர்த்து அதில் எவ்வித அசலான தன்மையையும் காண முடியவில்லை. தமிழ் சினிமாவில் வழக்கமான கழிவுகளைத் தவிர, உருப்படியாக படம் எடுப்பவர்கள் என்று அறியப்படுபவர்களின் திரைப் படங்கள் பெரும்பாலும் இப்படித்தான் இருக்கின்றன. துண்டு துண்டாக சில மின்னல் கீற்றுகள் இருந்தாலும் ஒட்டு மொத்த சினிமாவாக பார்க்கும் போது அது தரும் உன்னதத்தை இழந்து விடுகின்றன. இங்குதான் சர்வதேச தரத்திலான படைப்புகளுக்கும் தமிழ் சினிமாவின் தரத்திற்குமான விலகலையும் தூரத்தையும் உணர முடிகிறது. தீவிரவாதிகளால் ஒரு குழியில் தள்ளப்பட்டு சில நாட்களைக் கடந்து தலை நிறைய முடியுடன் காட்சியளிக்கும் மரியான், அதிலிருந்து தூக்கப்படும் போது வெட்டப்பட்ட குறைந்த முடியுடன் வருகிறான். Continuity -என்றொரு விஷயம இருக்கிறதா இல்லையா? இப்படி அடிப்படையான விஷயத்தில் கூட அலட்சியத்துடன் இருக்கும் வரை தமிழ் சினிமா, உண்மையான சர்வதேச விருதுகளை நினைத்துக் கூட பார்க்க முடியாது.

# "அக்ரகாரா" கொடுப்பனவுக்கு தனிச்சிங்களத்தில் கடிதம்

(அச்சுவேலி)

அரச ஊழியர்களுக்கான அக்ரகாரா காப்புறுதித் திட்டத்தின் கீழ் இணைத்துக் கொள்ளப்பட்ட அரச ஊழியர்கள் தமக்குரிய மருத்துவச் செலவீனங்கள் மற்றும் மூக்குக் கண்ணாடி பெற்றுக் கொண்டதற்குரிய செலவு ஆகியவற்றிற்கான பணத்தினை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்களை தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அனுப்பி வைக்கும் சந்தர்ப்பங்களில் மேற்படி நிதியத்தினால் விண்ணப்பதாரரிடம் மேலதிக தகவல்கள் கோரி அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள் தனிச்சிங்களத்தில் அமைந்திருப்பதால் சிங்களம் தெரியாத தமிழ் விண்ணப்பதாரர்கள் பெரும அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தேசிய காப்புறுதி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் சம்பந்தப்பட்டவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் தனிச்சிங்களத்தினாலான கடிதங்களை வாசித்து அதிலுள்ள விபரங்களை அவர்கள் அறிந்து கொள்வதற்காக சிங்களம் வாசிக்கத் தெரிந்தவர்களை நாடி அலையவேண்டி இருப்பதாகவும், இதனால் வீணான காலவிரயம் ஏற்படுவதாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினர்களினால் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பத்தில் உள்ள குறைபாடுகள் தொடர்பாக தகவல்கள் பற்றி தெரிந்து கொள்வதற்காக இந்நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பினை ஏற்படுத்தி கொள்ள முயல்கின்ற போதிலும் அவர்களும் ஆங்கிலமோ மற்றும் தமிழோ பேசத்தெரியாத நிலையில் தனிச்சிங்களத்திலேயே உரையாடுவதால் உரிய தகவல்களை சரியான முறையில் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் சிரமங்களுக்குள்ளான விண்ணப்பதாரிகள் மிகவும் மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இக்காப்புறுத் திட்டத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் ஊழியர்கள் இணைக்கப்பட்டுள்ள நிலையிலும் இவ்வாறானதொரு நிலை காணப்படுவது மிகவும் வேதனை அளிப்பதால் இனிவரும் காலங்களிலாவது இப்பிரச்சினைக்கு தீர்வினைப் பெற்றுக்கொடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையினை தமிழ் பிரதேச அரச ஊழியர்கள் முன்வைக்கின்றனர்.

இதேவேளை இதுதொடர்பாக எந்தவொரு ஆசிரியர் தொழிற்சங்கமும் எந்தவித நடவடிக்கையினையும் எடுக்க முன்வரவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (03)

## வீதி புனரமைக்கப்படுமா?

(அராலி)

அராலி வடக்கிலிருந்து சங்கானை செல்லும் பிரதான பாதை மிகவும் சேதமடைந்து காணப்படுவதால் இவ்வீதியால் பயணம் செய்யும் மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாவதாக தெரிவிக்கின்றனர். 3 வருடமாக திருத்தப்படாத இவ்வீதி தற்போது குண்டும் குழியுமாக மிகமோசமாக காணப்படுகிறது.

இப்பாதையினூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களின் நலனைக்கருத்தில் கொண்டு இப்பாதையை புனரமைக்க சம்மந்தபட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (180)

## புகைப்படத்திற்கு பதிவு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மாற்றுவலுவுள்ளோர்களுக்கான சமூக நலனோம்பு அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படப் பிடிப்பு பதிவுகளின் போது சமூகமளிக்க முடியாதவர்கள் எதிர்வரும் 26ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரையும் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவிற்கு சமூகமளித்து இலவச புகைப்படப பதிவு ஆகியவற்றை மேற்கொள்ள முடியுமென பிரதேச செயலர் இ.பிரதாபன் அறிவித்துள்ளார்.

சமூகமளிக்கும் மாற்றுவலுவுள்ளோர் தமது குடும்ப அட்டை, அடையாள அட்டைசகிதம் சமூகமளிக்க வேண்டுமெனவும் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (90)



பொலிகண்டி மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற வரலட்சுமி விரத பூசை (18)

# படையினரின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

(உரும்பிராய்)

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தின் ஆதரவுடன் படையினரின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம் ஒன்று உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நேற்று பகல் 9.30 மணியளவில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 511 வது படைகளின் கட்டளை அதிகாரிகளான லெப்ரினன்கேணல் கிர்த்தி,மேஜர்களான ஜெயசிங்கா ராமநாயக்கா மற்றும் சுகாதார அமைச்சில் இருந்து வருகை தந்த தொற்றா நோய்கள் வைத்தியதிகாரி வைத்தியகலாநிதி திருமதி விதானகே யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் அலுவலக தொற்றா நோய்கள் வைத்தியதிகாரி வி.லோகேஸ்வரன் கோப்பாய் பிராந்திய சுகாதரா வைத்தியதிகாரி ரி.ஜெயசீலன் கோப்பாய் வைத தியசாலை வைத்தியர் எஸ். நாக நாதன் கோப்பாய பொலிஸார் நிலையப் பொறுப்பதிகாரி ஜெயக கொடி உட்பட மற்றும் எனப் பலர் கலந்துகொண்டனர்.



# வேலை வாய்ப்புச் செய்திகள்

வவுனியா தனியார் வர்த்தக நிறுவனத்தில் கடமையாற்றுவதற்கு A/L வர்த்தகப்பிரிவில் கல்வி கற்ற ஆள்கள் தேவை. எதிர்பார்க்கும் சம்பளம், தொலைபேசி இலக்கம் குறித்து சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும், தேவைப்படின் தங்குமிட வசதி செய்து தரப்படும். தொடர்புக்கு 0777354470.

---

சுன்னாகத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள மருந்தகம் ஒன்றுக்கு 21-26 வயதுக்கு உட்பட்ட பெண் பிள்ளைகள் தேவை. கணனி அறிவு விரும்பத்தக்கது. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும் தொடர்பு 0778244334

---

போட்டோசொப் டிசைனர் (Photo Shop Disigner அல்பம் வேலை தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் ஆண் பெண் இருபாலாரும், வரவேற்பாளர் (Receptionist ஆண் பெண் இருபாலாரும் மேற்புறிப்பிட்ட துறைகளில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும். உரிய ஆவணங்களுடன் 20.08.2013 அன்று காலை 9.00 மணியிலிருந்து 12 மணிவரை நேரில் வரவும் சிறிநதியா டிஜிட்டல் கலர்லாப் 108ஏ, லக்ஸன் பிளாசா கட்டடம், நாவலர் வீதி யாழ்ப்பாணம், தொடர்புக்கு 0212228412.

---

யாழ். மாநகர சபை எல்லைக்கருள் வைண்டிங் போட்டோக் கொப்பி செய்வதற்கு வேலையாள் தேவை. தொடர்புக்கு 0771171872

---

யாழ். பலாலி வீதியில் உள்ள i7 Computer கணனி நிறுவனத்திற்கு பெண் கணக்காளர் மற்றும் ஆண் விற்பனையாளர்கள் தேவை. அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. 0212224959, 0777683676.

---

K.K.S.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள கையடக்கத் தொலைபேசி விற்பனை நிலையத்திற்க விற்பனையாளர்கள் (பெண்கள்) தேவை. சுனன்ாகத்தை அண்டிய பிரதேசத்தில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. 0777698158.

---

ஐஸ்கிறீம் ஸ்தாபனத்துக்கு ஐஸ்கிறீம் வேலை அனுபவமுள்ள ஆள் தேவை உடன் தொடர்பு கொள்ளவும், சம்பளம் பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம். தொடர்பு: 0776615973.

---

பரந்தன், பளை, கொடிகாமம், ஆணையிறவு போன்ற இடங்களில் வேலை செய்வதற்கு மேசன், மாபிள் பதிக்கக் கூடியவர்கள் உடனயாகத் தேவைப்படுகின்றார்கள். தங்குமிட வசதியுடன்தகுந்த வேலைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும் விவபரங்களுக்கு: 0715349942, 0718643645.

---

வவுனியாவில் இயங்கும் சைனீஸ், இந்தியன் ரெஸ்ட்டுரண்டுக்கு கிச்சன் ஹெல்பர்ஸ், கிளீனர்ஸ், வெயிட்டர்ஸ், கப்டன் போன்றவர்கள் உடன் தேவை. தகுதிக்கும் அனுபவத்திற்கும் ஏற்ற தகுந்த சம்பளம் உத்தரவாதத்துடன் வழங்கப்படும். வயதெல்லை 18-50 இடைப்பட்டவர்கள் உணவு, தங்குமிடம், போனஸ் என்பன வழங்கப்படும் தொடர்புகளுக்கு 0777585913, 0242227300.

---

படித்துவிட்டு எந்த வேலைக்கு செல்வதென்று குழப்பமா? கவலையை விடுங்கள்! ஆசிரியர் பயிற்சியுடன் கூடிய வேலைவாய்ப்பை நாங்கள் வழங்குகிறோம். உங்களது ஆங்கில மொழிஅறிவை விருத்தி செய்வதோடு, சர்வதேச பாடசாலையில் வேலைவாய்ப்பும் பெற்றுத் தரப்படும். A/L அல்லது O/L பரீட்சை எழுதியோர் விண்ணப்பிக்கலாம். அனைத்து வசதிகளுடன்கூடிய வகுப்பறை மற்றும் தங்குமிட வசதியுமுண்டு. பயிற்சிக்காலம் 6 மாதம் 12 மாதம் பரீட்சை முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ் வழங்கப்படும் Blooming Bubs Insternational teacher Training Institute (PV) 94034) No.388/11A, Baseline Road, Demata goda, Colombo 09. தொடர்புக்கு 0715669641.

---

தனியார் நிறுவனத்துக்கு சாரதி உதவியாட்கள் தேவை. ஊதியம். 48.000 நிரந்தரத் தொழில் உணவு, தங்குமிடம் உண்டு. தொடர்புக்கு: 0774283019 0717649497, 0722103318, 0726293122.










பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியால் அண்மையில் நடாத்தப்பட்ட 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் பாராட்டு விழாவில் வங்கி முகாமையாளர் எஸ்.பகீரதன் தலைமை தாங்கி உரையாற்றுவதையும் தேசிய சேமிப்பு வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம் பரிசில் வழங்குவதையும், வடமராட்சி வலய பிரதிக்கல்விப்பணிப்பாளர் எஸ்.இரவீந்திரன் இறைவரித்திணைக்கள யாழ்.மாவட்ட பிரதி ஆணையாளர் பீ.சிவாஜி ஆகியோர் நடுவில் நிற்பதையும் ,பாராட்டிப்பரிசில்களைப் பெற்ற மாணவர்கள் வங்கி ஊழியர்கள், விருந்தினர்களுடன் அமர்ந்திருப்பதையும் காணலாம்... (01)

# இந்து சமுத்திரத்தில் திறந்த கடல்வலயம் அத்து மீறிய மீன்பிடிக்கு சிறந்த தீர்வு

## இந்தியத்தரப்பு முன்மொழிகிறது

(கொழும்பு)

வடக்கு கடலில் இடம்பெறும் இந்திய மீனவர்களின் அத்து மீறிய மீன்பிடி நடவடிக்கைகளால் ஏற்படும் கசப்புணர்வுகளை களைந்தெறிய புதிய யோசனை ஒன்று முன்வைக்கப்பட்டிருக்கிறது.இந்த பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு திறந்த கடல் வலயங்களை அறிமுகம் செய்ய வேண்டுமென இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கை இந்திய மீனவர்களுக்கு இடையில் நிலவி வரும் முரண்பாடுகளைக் களைவதற்கு திறந்த கடல்வலய முறைமை சிறந்த வழி என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.குறித்த காலஅட்டவணைக்கு அமைவாக இந்திய இலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடக்கூடிய வகையில் ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென ராமேஸ்வரம் மீன்பிடிச் சங்கத்தலைவர் என்.ஜே.போஸ் தெரிவித்துள்ளார்.

இறுதித்தீர்மானம் இரண்டு தரப்பினர்களினாலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அமைய வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஓர் காலப்பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடச்சந்தர்ப்பம் அளிக்கும் அதேவேளை, மற்றுமொரு சந்தர்ப்பத்தில இலங்கை மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடச் சந்தர்ப்பம் அளிக்கப்படும் வகையில் இந்த புதிய யோசனைத் திட்டம் அமைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கடற்பரப்பில் இந்திய மீனவர்கள் அத்து மீறி மீன்பிடியில் ஈடுபடுவதனால் அடிக்கடி சர்ச்சைகள் ஏற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தபால் கட்டணங்கள் அதிகரிக்க வாய்ப்பு

(கொழும்பு)

மாகாண தேர்தல்கள் முடிவடைந்ததும் தபால் கட்டணங்களை அதிகரிப்பதற்கு தபால் திணைக்களம் ஆலோசித்து வருகிறது.எனினும்உள்நாட்டு தபால் கட்டணங்கள் எதிர்வரும் இரண்டு வாரங்களில் அதிகரிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதன்படி, ஐந்து ரூபா பெறுமதியான சாதாரண தபால் கட்டணம் 12 ரூபா முதல் 15 வரையில் உயர்த்தப்பட உள்ளது.

வர்த்தகத்தபால் கட்டணம் 15 ரூபாவிலிருந்து 20 25 ரூபாவாக உயர்த்தப்பட உள்ளது.

பதிவுத்தபால் கட்டணம் 10 20 ரூபா வரையில் உயர்த்தப்படலாம் எனத்தெரிவிக்கப்படுகிறது.இதேவேளை, தபால் கட்டண உயர்வினால் மக்கள் பாதிக்கப்படுவர் எனவும், இதற்கு கடுமையான எதிர்ப்பை வெளியிடுவதாகவும் தபால் தொழிற் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

# கால்நடை வளர்ப்பு இரு வருட டிப்ளோமா

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் இலங்கை கால்நடை வளர்ப்புப் பாடசாலையில் கால்நடை வளர்ப்பில் இரண்டு வருட டிப்ளோமா பாடநெறிக்கு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பதாரிகள் 17-25 வயதுக்கிடைப்பட்டவராகவும், க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் முதன்மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் விவசாயம் அல்லது வரலாறு சமூகக்கல்வி ஆகிய நான்கு பாடங்களில் திறமைச்சித்தி உட்பட ஆறு பாடங்களில் ஒரே தடவையில் சித்திபெற்றவராகவும், க.பொ.த உயர்தர பரீட்சையில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் மூன்று பாடங்களில் சித்திபெற்றவர்களாகவும் இருத்தல் வேண்டும். எழுத்து மூலப்பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

எழுத்து மூலப்பரீட்சை கால்நடை வளர்ப்பு மற்றும் பொது அறிவு ஆகிய இரண்டு வினாபத்திரங்களைக் கொண்டிருக்கும் பரீட்சைக்கட்டணம் 150 ஆகும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பரீட்சைக் கட்டணம் செலுத்திய காசுக்கட்டளையையும் இணைத்து எதிர்வரும் 16.09.2013இற்கு முன்னதாக் பணிப்பாளர், மனித வள அபிவிருத்தி, கால்நடை உற்பத்தி சுகாதாரத்திணைக்களம், த.பெ.இல 13 பேராதனை என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கலாமென கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார். (10)

# பாமர் சங்கமம்



'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்'போலத்தான் வளிமண்டலத்திணைக்களத்தில் பணிபுரிபவர்களின் இன்றைய நிலைப்பாடு காணப்படுகிறது. இரண்டு மாதங்களுக்கு முன்னதாக வளிமண்டல ஆய்வாளர்களின் கணிப்பீடுகளை முறியடித்துக் கொண்டு வந்ததோ,அன்றி வழமைபோல இவர்கள் காரியாலயத்துக்கு வந்து தத்தமது வேலைகளைப் பார்த்து விட்டு சாப்பிட்டு செமிபாட்டுக்குப்போகவும்,கடமை நேரம் முடியவும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கூடி அரட்டை அடித்தார்களோ அல்லது சிறுதூக்கம் தான் போட்டார்களோ தெரியவில்லை. திடீரென வான்நிலைமை மாறி வளிமண்டலமும் குழம்பி சூறாவளி வீசத்தொடங்கிவிட்டது. அவர்களால் அதனைத் தடுத்து நிறுத்த முடியவில்லை. இவர்களை நம்பி அண்டைக்கெண்டு கடலுக்குப் போனவர்கள் தப்பி ஓட்டிவந்தவர்களை விட கொஞ்சப் பேர் உயிரையும் விட நேர்ந்து விட்டது. அதனால் கொதித்தெழுந்த மக்களை சந்திக்கச் சென்ற எதிர் கட்சித் தலைவர் தாக்கப்பட்டார் அதனால் ஏற்பட்ட அபகீர்த்தியை அரசு இலட்சம் ரூபா கொடுத்துச் சமாளிக்க வேண்டியதாய் போச்சு.அதனால் வளிமண்டலத்திணைக்கள அதிகாரிகள் மேல் சீற்றம் கொண்டு நிண்டது அரசு.

அண்டு விட்டன் கொண்டலடி என்பது போல வளிமண்டலத் திணைக்கள அதிகாரிகள் நாள்தோறும் வானொலி அலைகளில் 'புத்தளம் தொடக்கம் யாழ்ப்பாணம்,மன்னார் ஊடாக திருகோணமலை வரையான கடல் பிரதேசங்களிலும் பொத்துவில் தொடக்கம் அம்பாந்தோட்டை வரையான கடல் பிரதேசங்களிலும் இடையிடையே கடும் காற்று வீசும்"என்றும் 'மணிக்கு 30 தொடக்கம் 60 கிலோமீற்றர்" வரையான வேகத்துடன் காற்று வீசுவதுடன் இடையிடையே இடி மின்னலுடன் கூடிய மழையும் பெய்யலாம். மேலும் காற்று தீவிரமடைந்து சூறாவளியாக மாறக்கூடிய நிலைமை காணப்படுவதால் கடல் தொழிலாளர்கள் அவதானத்துடன் இருக்குமாறு வளிமண்டலத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது. என்னும் அறிவித்தல் ஒவ்வொரு நாளும் காலை, மதியம், மாலை, இரவு ஆகிய நேரங்களில் ஒலிபரப்பாகும் செய்தி அறிக்கைகளைத் தொடர்ந்து ஒலிபரப்புவது வாடிக்கையாகிவிட்டது.

அநேகமாக இரண்டு மாதங்களுக்கு முன்பாக நடந்து முடிந்துபோன சம்பவங்களை அடுத்து வளிமண்டலம் விழிப்படை ந்து எடுத்துவரும் நடவடிக்கை இப்பொழுது எந்த நாளுமே மக்களைப் பீதிக்கு ஆட்படுத்துவதும் அல்லாமல் நாட்களெல்லாம் சீரற்ற நாட்களாகவும் உருவாக்கிவிட்டு வேடிக்கை பார்ப்பதாகப்படுகிறது. 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" போல மருண்டு போயுள்ள வளிமண்டலத் திணைக்கள அதிகாரிகள் சும்மா எந்த நாளுமே மக்களை வெருட்டிக் கொண்டிருப்பது வாடிக்கையாப் போச்சு .இல்லையே பின்னை நான் சொல்லுறேே....

# முன்னேஸ்வரத்தில் இன்று தேர்த்திருவிழா

சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீ முன்னை நாதப்பெருமான் ஆலயத்தில் இன்று திங்கட் கிழமை பஞ்சரத தேர்ப்பவனி இடம்பெறவுள்ளது.

இன்று காலை முன்னேஸ்வரம் ஆலயத்தில் இருந்து புறப்படும் பஞ்சரதம் சிலாபம், குருநாகல் வீதி,ஐயனார் கோவில் தெரு ஊடாகச்சென்று ஸ்ரீ காளியம்மன் விதியின் ஊடாக தேர் ஆலயத்தை வந்தடையும். புதிய சித்திரத்தேரில் எம்பெருமான் ஆரோகணித்து வீதிவலம் வருவார்.இவ்வுற்சவத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாட்டின் பல்வேறு இடங்களில் இருந்தும் வருகை தரும் அடியவர்களின் வசதிகருதி போக்குவரத்து ,குடிநீர், மலசலகூடவசதிகள், அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (10)

# முல்லையில் இலக்கிய விழா

(யாழ்.நிருபர்)

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சினால் வருடாந்தம் நடாத்தப்பட்டுவரும் வடமாகாண இலக்கியப்பெருவிழா இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 01,02 ஆம் திகதிகளில் முள்ளியவளையில் முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் இவ்விழாவை நடத்துவதற்கான ஏற்பாடுகளை வடமாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுவருகிறது. (10)

# வடக்கில் மற்றுமொரு கைத்தொழிற் பேட்டை 24 ஏக்கர் காணியில் தயாராகிறது

கைத்தொழிற் பேட்டைகளை நிர்மாணிக்கும் திட்டத்தின் கீழ் 26 ஆவது கைத்தொழிற் பேட்டையின் நிர்மாணப்பணிகள் மன்னார் மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த கைதொழிற் பேட்டையின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 240 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த கைத்தொழிற் பேட்டை சுமார் 24 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது.

மன்னார் மாவட்டத்திலுள்ள இயற்கை வளங்கள் மூலமாக உச்ச பயனைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில இந்தகைதொழிற பேட்டையில், மீன் வளம் சார்ந்த கைத்தொழில்கள், கடற்றொழில் உபகரணங்கள் தயாரித்தல், உப்பு மற்றும் ஆடைத் தொழிற் சாலைகளும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

கைத்தொழிற்பேட்டைக்கு தேவையான மின்சாரம், நீர் போன்ற பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளதுடன் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு முதலீட்டு வாய்ப்புகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்தத்திட்டத்தின் ஊடாக மன்னார் பிரதேசத்திலுள்ள சுமார் இரண்டாயிரம் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகள் கிட்டவுள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்கள இணையத் தளம் சுட்டிக்காட்டியுள்ளது.

உருவில் வெற்றிடங்களில் குறிப்பிடுக.




07. உருவில் விசுக்கோத்து பைக்கற்று காணப்படுகிறது.




01. அதன் விளிம்புகளின் எண்ணிக்கை யாது? ..................................

02. சதுர முகங்களின் எண்ணிக்கை யாது? ..................................

08. ஒரு பிள்ளை பாடசாலை மைதானத்தில் புள்ளி A யிலிருந்து ஆரம்பித்து 30m தூரம் மேற்கு நோக்கியும் அவ்விடத்தில் இருந்து 20m தூரம் தெற்கு நோக்கியும் அவ்விடத்திலிருந்து 40m தூரம் கிழக்கு நோக்கியும் சென்று புள்ளி B யிற்கு வருகின்றது. புள்ளி B யையும் பிள்ளை சென்ற பாதையையும் வழங்கப்பட்டுள்ள சதுரக் கோட்டு படத்தில் குறிக்க. உருவில் ஒரு சிறிய சதுரத்தின் ஒவ்வொரு பக்கமும் 10m தூரத்தை குறிக்கின்றது எனக் கொள்க.




09. சுஜித் . சுசிலா தம்பதியினரின் கடைசிமகனான மதன் 2008ம் ஆண்டு மாசிமாதம் 29ம் திகதி லீப் வருடத்தில் பிறந்தான். அடுத்ததாக வரும் லீப்வருடத்தில் மதனுக்கு எத்தனை வயதாகும்? ..................

10. கழிக்குக. $\frac{4}{5} - \frac{4}{10} = \square$

**(12) நிசார் தன்னைச் சுற்றி விளையாட்டுப் பொருட்களை எவ்வாறு காட்சிக்கு வைத்தான் என்பது கீழே காட்டப்பட்டுள்ளது. நிசார் கார் இருக்கும் திசையை நோக்கி அமர்ந்திருக்கின்றான்.**




01. நிசார் மேற்குத்திசையில் வைத்த பொருள் எது? ..................................

02. நிசார் ஜீப்வண்டியை எத்திசையில் வைத்துள்ளான்? ..................................

03. அவன் சைக்கிள் வண்டியை எத்திசையில் வைத்துள்ளான்? ..................................

04. ஆகாய விமானம் எத்திசையில் உள்ளது? ..................................

05. நிசார் பேருந்து இருக்கும் திசையை நோக்கி திரும்பினான் எனக் கொண்டால் அவனது வலதுபக்கத்தில் தற்போது இருப்பது எவ்விளையாட்டுப்பொருளாகும், ..................................

**(13) நான் எனது குடும்பத்தாருடன் தெஹிவலை மிருகக்காட்சிசாலையில் உலா வருகின்றேன்...... இதை தொடர்ந்து கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களை கொண்டிருக்க வேண்டும். இலக்கணரீதியான தொடர்பு சரியாக இருக்க வேண்டும்.**

01. ..................................................................

02. ..................................................................

03. ..................................................................



# தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை - 2013

பகுதி - II

1 மணி 15 நிமி

# கல்வி முரசு



**(1) பின்வரும் துண்டுப்பிரசுரத்தை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

பொது மக்களே!

## மின்னல்! மின்னல்!

மின்னலில் இருந்து பாதுகாப்புப் பெறும் வழியை ஞாபகத்தில் வைத்திருங்கள்.

★ இடி ஒலியை நாம் உணர்ந்தால் மின்னலால் தாக்கக் கூடிய பிரதேசத்தில் உள்ளோம் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.
★ திறந்த வெளிகளில் நிற்காமல் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்லுங்கள்.
★ உயர்ந்த மரங்களின் கீழோ மரங்களின் அருகிலோ நிற்க வேண்டாம்.
★ வீட்டின் மின்இணைப்பைத் துண்டித்து விடுங்கள்
★ மின்னல் தாக்கம் நிகழும் போது குளிப்பதைத் தவிருங்கள்.
★ குளிரூட்டிகளின் மின் இணைப்பை துண்டித்து விடுங்கள்.
★ மின் கம்பங்களுக்கு அருகில் நிற்காதீர்கள்.
★ இடி தாங்கி ஒன்றை அமைத்துக் கொள்ளுங்கள்.

**முன் எச்சரிக்கையுடன் செயற்படுங்கள்.**

வளிமண்டலவியல் திணைக்களம்.

1. ஞாபகம் எனும் சொல்லுக்கான எதிர்சொல்லைத் தருக? ..................................
2. ஒலி எனும் சொல்லின் ஒத்த சொல்லை தருக? ..................................
3. மின்னலில் இருந்து பாதுகாப்பு பெறும் வழிவகைகளை எடுத்து கூறிய நிறுவனம் எது? ..................................
4. மின்னல் தாக்கம் நிகழும் போது எதைச் செய்வதை தவிர்க்க வேண்டும்? ..................................
5. மின்னல் தாக்கத்தில் இருந்து பாதுகாப்பு பெற அமைத்துக்கொள்ள வேண்டியது எதை? ..................................
6. முன்எச்சரிக்கையுடன் செயற்படுங்கள் என்பதை விளக்கும் பழமொழி ஒன்றைகுறிப்பிடுக? ..................................

**(2) பின்வரும் பழமொழிகளுக்கான கருத்தை தருக.**

1. கிட்டாதாயின் வெட்டென மற ..................................
2. ஆழமறியாமல் காலை விடாதே ..................................

**(3) பின்வரும் பேச்சு வழக்கு சொற்களை எழுத்து வழக்கில் எழுதிக்காட்டுக.**

1. இளநீ .................. 2. எண்நெய் .................. 3. கோடாரி ..................

**(4) பின்வரும் தொடருக்கான தனிச் சொல்லை தருக.**

1. அரண்மனையில் பெண்கள் வசிக்குமிடம் ..................................
2. யானை, குதிரை, தேர், முதலியவற்றை நடத்துவோன் ..................................
3. முதன் முதல் இயற்றிய பாட்டு ..................................
4. புதிதாக செய்த கப்பல், தேர் முதலியவற்றை முதலில் செலுத்திப்பார்த்தல் ..................................

1. இ. ஓ. கூ ..................................... 3. இ.ம.வா .....................................

2. பா. அ .ச ..................................... 4. ம.ப.பா. .....................................

**(6) கருத்தினை தமிழில் தருக.**

1. Hundred ..................................... 2. Today is my birthday .....................................

**(7) கருத்தினை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. ஆயிரம் ..................................... 2. நாங்கள் படிப்போம் .....................................

**(8) சிங்களத்தொடருக்கான கருத்தினை தமிழில் தருக.**

1. மல்லி செல்லம் கரனவா ..................................... 2. நங்கி துவனவா .....................................

**(9) இவ்வாக்கத்தை செய்வதற்கு தேவையான பொருட்களை குறிப்பிடுக.**

01. இதன் பெயர் என்ன? .....................................



தேவையான பொருட்கள்

02. .....................................
03. .....................................
04. .....................................
05. .....................................

**(10) மிகச் சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. அங்கை வடிவான இலையொன்றுக்கு உதாரணம் எது?
1. பப்பாசி 2. பலா 3. முருங்கை 4. பன்னம்

02. மாலைகட்டுவதற்கு உதவும் பூ அல்லாதது எது?
1. ரோசா 2. மல்லிகை 3. அந்தூரியம் 4. ஓர்கிட்

03. வேர் முதல் உச்சிக்கிளை வரை காய்க்கும் தாவரம்.
1. விளிம்பி 2. ஈரப்பலா 3. பனை 4. பலா

04. கையில் ஒட்டிய பலாக்காய்ப்பாலை எளிதாக அகற்ற பயன்படுத்தக்க பொருள்
1. சவரக்காரம் 2. குளிர்நீர் 3. வெந்நீர் 4. மண்ணெண்ணெய்

05. தேசியக் கொடி ஏற்றும் வேளை மங்கள வாத்தியம் இசைக்கப்படும். மங்கள வாத்தியத்திற்காக பயன்படுத்தும் இசைக்கருவிகள் எவை?
1. மேளம் - புல்லாங்குழல் 2. நாதஸ்வரம் - மேளம்
3. மேளம் - சங்கு 4. தவில் - தம்பட்டம்

06. தேசிய கீதம் இசைக்கும் போது இருக்க வேண்டிய சரியான கொண்ணிலை யாது?
1. இலகுவாய் நிற்றல் 2. நிமிர்ந்து நிற்றல்
3. வலம் திரும்புதல் 4. இடம் திரும்பி நிற்றல்

07. தேசிய கீதம் இசைப்பதற்கு மாணவர்களால் பரவலாக இசைக்கப்படும் வாத்தியக்கருவி?
1. டிரம் 2. சங்கு 3. மேளம் 4. எக்கோடியன்



3. சிறிமாவோபண்டார நாயக்க 4. டி.பி. விஜேதுங்க

09. மாணவத்தலைவர்களுக்கான சிறந்த பண்பாக கொள்ளக்கூடியது?
1. கருணை 2. வீரம் 3. நல்லொழுக்கம் 4. அறிவு

10. இலங்கை நாடு எழில் கொண்ட நாடு, வளமான நாடு என்பதை புலப்படுத்திக்காட்டும் தேசியகீதத்தின் வரிகள்
1. நமதுறு புகழிடம் என ஒளிர்வாய்
2. இயலுறு பிளவுகள் தமை அறவே
3. வள வயல் நதி மலை மலர். நறுஞ்சோலை கொள் லங்கா
4. நல்லெழில் பொலிசீரணி

11. இக்குறியீடானது



1. பலத்த காற்று வீச இடமுண்டு
2. மின்னல் வெட்டும் நேரம்
3. மின்தாக்குதல் ஏற்பட இடமுண்டு
4. மின்னலுடன் கூடிய மழை பெய்யும்

12.




இரசம் சேர்க்கப்பட்ட குவளையினுள் இரும்பு குண்டு போடப்பட்ட போது அவதானிக்கக்கூடியது.
1. இரும்பு குண்டு இரசத்தின் அடிப்பகுதியில் இருக்கும்.
2. இரும்பு குண்டு மேலே மிதந்து வரும்.
3. இரும்பு குண்டு நடுவில் மிதந்த வண்ணம் காணப்படும்.
4. இரும்பு குண்டு பெரிதாகக் காணப்படும்.

13. மீனெண்ணெய்யில் உள்ள போசணைச்சத்து
1. விற்றமின் A 2. விற்றமின் D 3. விற்றமின் C 4. விற்றமின் B

14. பண்டைய நூல்களை மீள வெளியிட்டவரும் நையாண்டிக் கவிதைகளை யாத்தவருமான இவர்.



1. சேர் டீ.பி. ஜயதிலக்க
2. கலாநிதி ஆனந்த குமாரசாமி
3. சேர் பொன்னம்பலம் இராமநாதன்
4. கலாநிதி ரீ.பீ ஜாயா

**(11) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

01. அப்பா எனக்கு தந்த ரூபாய் 60 லிருந்து $\frac{2}{4}$ பங்கை அண்ணனுக்குக் கொடுத்தேன் மீதித்தொகையில் ஒரு பந்தை வாங்கினேன் எனின் பந்தின் விலையைக் காண்க? .....................................

02. ஒரு நோயாளிக்கு ஒரு தடவை 2 வில்லை வீதம் நாளைக்கு இரு தடவைகள் எடுப்பதற்கு 30 வில்லைகள் வழங்கப்பட்டன இவ்வில்லைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானது? .....................................

03.



இவ்வுருவில் நிழற்றப்பட்ட பின்னத்துக்கான தசம எண்ணை குறிப்பிடுக.

.....................................

04. 0.75 என்பதை பின்னத்தில் தருக? .....................................

05. 250g உருளைக்கிழங்கின் விலை ரூ. 28 எனின் $\frac{3}{4}$ kg கிழங்கின் விலையை காண்க? .....................................

# நிகழ்வுகளின் பதிவுகள்....




யாழ். நல்லூர் பிரதேச சபையினால் கோண்டாவில் மத்திய சனசமூக நிலையத்தில் நடைபெற்ற நடமாடும் சேவை...



தெல்லிப்பளை துர்க்காதேவி அம்மன் ஆலயத்தில் ஆடிச்செவ்வாய் அன்று இடம்பெற்ற விசேட உற்சவத்தின்போது... (66)









மக்கள் வங்கியின் அனுசரணையுடன் யாழ். கல்வி வலயத்தால் யாழ். இந்து ஆரம்பப்பாடசாலையில் நடாத்தப்பட்ட வழிகாட்டல் கருத்தரங்கு...



காரைநகர் அரசடிக்காடு கதிர்வேலாயுதசுவாமி ஆலய வருடாந்த தீர்த்த உற்சவத்தில் இடம்பெற்ற தீமிதிப்பு நிகழ்வு.... (50)



பழைய பூங்கா வீதியில் கட்டப்பட்டுவரும் இலங்கை மின்சார சபையின் வடபிராந்திய பிரதி பொது முகாமையாளர் அலுவலக கட்டடத்தின் தோற்றம்.... (இ)





ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்தின் இரதோற்சவம் அண்மையில் இடம் பெற்ற போது... (104)







அமெரிக்க மற்றும் இலங்கை படையணி இணைந்து அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நடாத்திய பசுபிக் ஏஞ்சல் இறுதி நாள் நிகழ்வுகளின் பதிவுகள்... (03)

# தமிழ்நாட்டை காங்கிரஸ் விழுங்கும் காலம் விரைவில்

மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் மரகதம் சந்திர சேகரின் மகள் லதா பிரியகுமார். தேசிய தாழ்த்தப்பட்டோர் ஆணையத்தின் உறுப்பினராக இருந்த இவர் கடந்த ஜுன் 23-ஆம் தேதி காலமானார். இவரின் படத் திறப்பு நிகழ்ச்சி ராஜா அண்ணாமலை மன்றத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழக காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் முகுல் வாஸ்னிக் கலந்து கொண்டு லதா பிரியகுமார் படத்தைத் திறந்து வைத்தார். மத்திய அமைச்சர்கள் ஜி.கே. வாசன், சுதர்சன நாச்சியப்பன், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன், முத்த தலைவர் குமரி ஆனந்தன் உள்பட ஏராள மானோர் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் பேசிய மத்திய இணை அமைச்சர் நாராயண சாமி, தமிழ்நாட்டில் காங்கிரஸ் பலவீனமாக இல்லை. தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தாலே போதும் கட்சி மேலும் வலுப்பெறும். பதவி வரும் போகும். ஆனால் தொண்டராக இருப்பதே பெருமை.

தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் தனித்து நிற்கப் போகிறோம் என்கின்றனர். ஆனால தனித்து நின்றால் வெற்றிபெற முடியாது. காங்கிரஸ் துணை இல்லாமல் எந்த கட்சியும் வெற்றிபெற முடியாது. தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சியை பிடிக்கும் காலம் வெகு தொலைவில் இல்லை. காங்கிரஸை யாராலும் வீழ்த்த முடியாது என்றார்.

## தூள் கிளப்புகிறது "தலைவா" தயாரிப்பாளருக்கு திடீர் சுகயீனம்

நடிகர் விஜயின், "தலைவா" பட விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், படத் தயாரிப்பாளர், நெஞ்சு வலியால், நேற்று முன்தினம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உள்ளார். இதற்கிடையே, தலைவா படத்தை வெளியிட நடவடிக்கை கோரி, அரசியல் கட்சித் தலைவர்கள், பேட்டியளித்து வருகின்றனர்.




நடிகர் விஜய், அமலா பால் நடித்த, "தலைவா" படம் கடந்த, 9ஆம் திகதி வெளியாக வேண்டியது. ஆனால், தியேட்டர்களுக்கு வந்த வெடிகுண்டு மிரட்டல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால், தலைவா பட வெளியீடு தள்ளிப் போனது. பிரச்னையை தீர்க்க, முதல்வரை சந்திக்க அனுமதி கேட்டு, நடிகர் விஜய், தயாரிப்பாளர் சந்திர பிரகாஷ் ஜெயின் மற்றும் இயக்குனர் விஜய் உள்ளிட்டோர், காத்திருக்கின்றனர். தலைவா பட பிரச்னையில், முதல்வர் சந்திப்பு தாமதம், உண்ணாவிரத அனுமதிக்கு சிக்கல், கடனாளி ஆகும் சூழ்நிலையால், நேற்று அப்படத் தயாரிப்பாளர், சந்திர பிரகாஷ் ஜெயினுக்கு, திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மன உளைச்சல் மற்றும் நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட ஜெயின், சென்னை, வடபழனியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.

## அதிகம் குடித்தால் ஆபத்தும் அதிகம்

### கோப்பி பிரியர்களுக்கு எச்சரிக்கை

உலகச் செய்திகள்

(வோஷிங்டன்)



ஒரு நாளைக்கு, நான்கு கோப்பை காபி குடிப்பவர்களின் இதயம் பாதிக்கப்படுவதாக, அமெரிக்க ஆய்வாளர்கள் அதிர்ச்சித்தகவல்களை வெளியிட்டு உள்ளனர். இதுகுறித்து, கலிபோர்னியாவைச் சேர்ந்த ஆய்வாளர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: உலகில் அதிகம் பேர், காபி குடிக்கும் பழக்கத்திற்கு அடிமையாகி உள்ளனர். காபி குடிக்கும் பழக்கம் அதிகரிப்பதால், உடல் சார்ந்த பிரச்னைகள் அதிகம் ஏற்படுகிறது. ஒரு நாளைக்கு, நான்கு கோப்பை காபி குடிக்கும் பழக்கம் உடைய, 40 ஆயிரம் பேரிடம் நடத்திய ஆய்வில், பல அதிர்ச்சி தகவல்கள் வெளியாகி உள்ளன. அவர்களில், 50 சதவீதத்திற்கும் மேலானோரின் உடல் நிலை கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. அதிகம் காபி குடிப்பவர்களின் இதயம் எளிதில் பலவீனம் அடைகிறது. 17 ஆண்டுகள் தொடர்ந்து நடத்திய ஆய்வில், 2,500க்கும் மேற்பட்டோர் காபி குடிக்கும் பழக்கத்தால் உயிரிழந்து உள்ளனர். 55 வயதிற்கு உட்பட்டவர்களே இதில் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். காபி குடிக்கும் பழக்கம் உடைய இளைஞர்கள், உடல் அளவில் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். ஒரு வாரத்திற்கு, 28 கோப்பை காபி குடிப்பவர்களின் இதயம் கடுமையாக பாதிக்கப்படுகிறது. காபி குடிக்கும் பழக்கம் உடையவர்களில், 32 சதவீதம் பேர், இதய நோயால் பாதிக்கப்பட்டு உள்ளனர். இதயத்தை பாதிக்கும் எந்தப்பொருளும், காபியில் இருப்பதாக இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை. எனினும், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள், காபி குடிப்பதை தவிர்ப்பது நல்லது. இவ்வாறு, ஆய்வாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

## பிலிப்பைன்ஸ் கடலில் விபத்து மாண்டனர் 170 கடற்பயணிகள்



பிலிப்பைன்ஸில் சரக்கு கப்பலுடன் பயணிகள் கப்பல் மோதி விபத்துக்குள்ளானதில், 870 பயணிகளுடன் மூழ்கத் தொடங்கியது.

பிலிப்பைன்ஸின் சிபு துறைமுகம் அருகே செயிண்ட் தாமஸ் அக்வினாஸ் என்ற பயணிகள் கப்பல், சரக்கு கப்பல் ஒன்றுடன் கடந்த சனிக்கிழமை மோதியது.

இதில் 870 பயணிகளுடன் வந்த பயணிகள் கப்பல் பலத்த சேதமடைந்தது. கப்பலில் ஓட்டை விழுந்ததால் கடல் நீர் உள்ளே புக மூழ்கத் தொடங்கியது. இச்சம்பவம் அறிந்து உடனடியாக விரைந்து வந்த படையினர், 629 பேர் மீட்கப்பட்டனர்.

எனினும் பயங்கர விபத்து என்பதால் கப்பலில் பயணம் செய்தவர்களில் 170இற்கும் மேற்பட்டோரை காணவில்லை.

இவர்கள் அனைவரும் கடலில் மூழ்கியிருக்கலாம் என்ற சந்தேகத்தில் மீட்புப் படையினர் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையிலும் இந்த விபத்தில் பலியான 32 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளது.

எனினும், கடுமையான மழை மற்றும் சூறாவளி காரணமாக மீட்புப் பணிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாக கடற்படை செய்தித் தொடர்பாளர் கிரி கோரி ஃபாபிக் தெரிவித்துள்ளார்.

## இன்னும் தணியாத கலவரம் பற்றி எரிகிறது எகிப்து



எகிப்தில், முன்னாள் அதிபர் முகம்மது முர்சியை மீண்டும் பதவியில் அமர்த்த கோரி அவரது ஆதரவாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு இராணுவம் நடத்திய தாக்குதலில் போராட்டத்தில் ஈடுபட்ட 638 பேர் கொல்லப்பட்டனர்.

அதை தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமை நடந்த தொழுகைக்கு பிறகு போராட்டம் தீவிரப்படுத்தப்பட்டது. தெருக்களில் குவிந்த போராட்டக்காரர்கள் மீது இராணுவம் மற்றும் பொலிஸார் சுட்டதில் ஒரே நாளில் 173 பேர் பலியாகினர்.

இதற்கிடையே, கெய்ரோ நகரின் மத்தியில் உள்ள அல் ஹபாத் மசூதியில் போராட்டக்காரர்கள் தஞ்சம் புகுந்தனர். அவர்கள் அங்கிருந்தபடியே, வெளியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர்.

பதிலுக்கு இராணுவத்தினரும் சுட்டனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையே கடும் துப்பாக்கி சண்டை நடந்தது. இதனால் அங்கு பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டது.

மசூதிக்குள் பதுங்கியிருப்பவர்களை வெளியேற்ற 1000க்கும் மேற்பட்ட இராணுவ வீரர்கள் அங்கு முற்றுகையிட்டிருந்தனர். பின்னர் அதிரடி தாக்குதல் நடத்தி மசூதிக்குள் இருந்தவர்கள் அனைவரையும் வெளியேற்றினர்.

மேலும், ஏராளமானவர்கள் கைது செய்யப்பட்டனர். இதற்கிடையே, போராட்டத்தில் தீவிரமாக ஈடுபடும் இஸ்லாமிய சகோதரத்துவ கட்சியை சட்டப்படி கலைக்க இடைக்கால பிரதமர் ஹீம் பெப்லாவி திட்டமிட்டுள்ளார். இக்கட்சியை கடந்த 1954ஆம் ஆண்டில் இராணுவ ஆட்சியாளர்கள் கலைத்து விட்டனர். தற்போது இது அரசு சாராத நிறுவனமாக பதிவு செய்யப்பட்டு இயங்கி வருகிறது. இக்கட்சியை கலைத்து விட்டால் அதன் சொத்துக்கள் மற்றும் பணம் முழுவதையும் பறிமுதல் செய்ய முடியும். இதன் மூலம் போராட்டத்தை ஒடுக்க முடியும். எனவே அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபட்டுள்ளது.

## வடகொரியாவில் பட்டினியை விரட்ட உதவிகோருகிறது ஐ.நா. சபை



வடகொரியாவில் உணவு, மருத்துவ வசதியின்றி தவிக்கும் மக்களுக்கு உதவ ரூ.601 கோடி நிதி தேவைப்படுகிறது. உலக நாடுகள் தாராளமாக நிதியுதவி செய்ய வேண்டும் என்று ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூன் வேண்டுகோள் விடுத்துள்ளார். ஐநா பொதுச் செயலாளர் பான் கீ மூன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

வடகொரியாவில் 10 ஆண்டுகளாக போதிய சுகாதார வசதி, உணவு, மேம்பாடு இன்றி மக்கள் தவித்து வருகின்றனர். அங்கு சரியான வளர்ச்சி இன்றி தவிக்கும் மக்களுக்கு, வெளியில் இருந்து ஏராளமான உதவிகள் தேவைப்படுகின்றன. 2013ம் ஆண்டில் அங்குள்ள மக்களுக்கு உணவு, சுகாதாரம், வாழ்வாதாரம் ஆகியவற்றை மேம்படுத்த ரூ.601 கோடி நிதியுதவி தேவைப்படுகிறது. கடந்த 1990ம் ஆண்டில் இருந்து அங்கு ஏற்பட்ட பஞ்சம் காரணமாக ஏராளமான மக்கள் உணவு மற்றும் போதிய மருத்துவ வசதி இன்றி வாடுகின்றனர். இதனால் ஏராளமானோர் உயிரிழந்துள்ளனர்.

# ஆளும் கட்சியில் நீடிப்பதா? முஸ்லிம் காங்கிரஸ் மீது அழுத்தம்

## பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவிப்பு

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அதிருப்தியளிக்கிறது. அண்மைக்காலமாக இடம்பெற்று வரும் சம்பவங்கள் ஆளும் கட்சியில் நீடிப்பதா இல்லையா என்பதனை தீர்மானிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு தள்ளியிருப்பதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலர் ஹசன் அலி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கி வரும் சில பிரச்சினைகளுக்கு அரசாங்கம் நேரடியாகத் தலையிட்டு தீர்வுகளை வழங்கத் தவறியுள்ளது. இதன் காரணமாக முஸ்லிம் மக்கள் கட்சியின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றனர்.

முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் சிறுபான்மையினராகவே நோக்கப்படுகின்றனர். முஸ்லிம்கள் உதாசினம் செய்யப்பட்டு வருகின்றனர். மஹியங்கனையில் பள்ளிவாசல் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து ஜனாதிபதியிடம் பேச்சுவார்த்தை நடத்த பதினைந்து முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரியிருந்த போதிலும், இதுவரையில் அந்தச் சந்திப்பு நடத்தப்படவில்லை.

கடந்த வாரம் கிராண்ட்பாஸ் பள்ளிவாசல் தாக்குதல் தொடர்பிலும் ஜனாதிபதியை சந்திக்க கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும அதற்கும் பதில் எதுவும் கிடைக்கவில்லை. கிராண்ட்பாஸ் சம்பவத்தைச் சில அமைச்சர்கள் சரியாக புரிந்து கொள்ளவில்லை.

முஸ்லிம் பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் யோசனைத் திட்டமொன்றை முன்வைக்க உள்ளது என்றார்.

# கிளிநொச்சியில் விபத்து; இரு பொலிஸார் காயம்




கிளிநொச்சி பொலிஸ் நிலையத்திற்கு அருகில் ஏ-9 வீதியிலிருந்து திருநகர் நோக்கி செல்லும் வழியில் நேற்று இரவு 7.30 மணியளவில் இடம்பெற்ற வீதி விபத்தில் மாங்குளம் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த இரண்டு பொலிஸார் படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொலிஸ மோட்டார் சைக்கிளும் டிப்பர் ரக வாகனமுமே விபத்திற்குள்ளாகியுள்ளது. (29)

# ஐயனார் வித்தியாசாலைக்கு புதிய கட்டடம் திறப்பு

(வேலணை)

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலயத்தில் புதிய கட்டட திறப்புவிழா நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. அமரர் திருமதி இராசம்மா செல்லத்துரையின் ஞாபகர்த்தமாக செ.இராமலிங்கம் குடும்பத்தினரால் அமைக்கப் பட்ட இப்புதிய கட்டடமே திறப்புவிழா செய்யப்படவுள்ளது.

பாடசாலை அதிபர் திருமதி பு.இராசநாயகம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்விற்கு கல்விசார் ஊழியர்கள், பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய விருந்தினர்கள் மற்றும் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (21)

## போர்க்குற்ற...

ஐ.நா. பொதுச்செயலர் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதாரமாக அமைந்த தரவுகளை தாமதமின்றி வெளியிடுமாறும் அவர் கோரியுள்ளார்.

அறிக்கையின் மூலங்களின் பெயர்களை வெளியிட மறுப்பதால், நிபுணர்குழு அறிக்கை, நீதி மன்றத்தினாலோ அல்லது சிறப்பு விசாரணைப் பொறிமுறையினாலோ ஏற்றுக்கொள்ளப்படாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வடக்கில் அரசாங்கம் மேற்கொண்ட கணிப்பீட்டின்படி, மோதலின் இறுதிக்கட்டத்தில், 7400 பேர் கொல்லப்பட்டதாகவும், 2600 பேர் காணாமற்போயுள்ளதாகவும் தெரியவந்துள்ளது. கொல்லப் பட்ட 7400 பேரில், விடுதலைப் புலிகளுக்காக சண்டையிட்டு மரணமானவர்களும் உள்ளடங்கியுள்ளனர். காணாமற்போன 2600 பேரில், 1600 பேர் விடுதலைப் புலிகளுடன் இருந்தவர்கள். 438 பேர் மட்டுமே, இராணுவக் கட்டுப்பாட்டில் காணாமற்போயுள்ளனர். இவற்றில் 28 காணாமற்போன சம்பவங்கள் குறித்தே படையினர் மீது நேரடியாக குற்றம்சுமத்தப்பட்டுள்ளது. என்றும் அவர் கூறியுள்ளார்.

## தென்பகுதி...

விழுந்து காயங்களுக்குள்ளாகியதாக கூறி யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த வாரம் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்த குருநாகல் பகுதியைச் சேர்ந்த அப்புஹாமி நிஷாந்த (வயது - 42) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

உயிரிழந்த நபரின் உடற்கூற்றுப் பரிசோதனையை மேற்கொண்ட சட்ட வைத்திய அதிகாரி, குறித்த நபரின் கையில் வெட்டுக் காயங்களும், தலையில் அடிகாயமும் காணப்படுவதாக பொலிஸாருக்குத் தெரிவித்தார். உயிரிழந்த நபர் யாழ். பொலிஸ் நிலையத்திற்கென நிர்மாணிக் கப்பட்டுவரும் புதிய கட்டடத்தில் வேலை செய்து வருகின்றார் என்றும், கொழும்புத்துறைப் பகுதியில் உள்ள நண்பரின் வீட்டில் தங்கியிருந்து வேலை பார்த்து வந்துள்ளதாகவும் பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

இந்நிலையில், குறித்த நபரை கொலை செய்யும் நோக்கத்துடனேயே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் தங்கியிருந்த நண்பனின் தாயார் மற்றும் தந்தையாரிடம் விசாரணை மேற்கொண்டதை அடுத்து அவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்ததாக அவர் குறிப்பிட்டார்.

கணவன், மனைவி இருவரையும் விசாரணை மேற்கொண்ட பின்னர் இன்று யாழ். நீதிவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (25)

## கொமன்வெல்த்...

இலங்கையில் வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா, பிரதமருக்குக் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார். இதே கருத்தை தி.மு.க. தலைவர் கருணாநிதியும் தெரிவித்துள்ளார். காங்கிரஸ் தமிழக தலைவர் ஞானதேசிகனும் பிரதமரை நேரில் சந்தித்து இது தொடர்பாக வலியுறுத்தியுள்ளார்.

இது வெளியுறவுத்துறை முடிவெடுக்க வேண்டிய ஒன்று. இந்தியா தனது அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணவே விரும்புகிறது. அவர்கள் தவறு செய்யும்போது அதைச் சுட்டிக்காட்டுவதையும் இந்தியா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. எனவே பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்பது தொடர்பாக தமிழக கட்சிகளின் கோரிக்கையை பிரதமர் கனிவுடன் பரிசீலித்து நல்ல முடிவு எடுப்பார் என நம்புகிறேன் எனத் தெரிவித்தார்.

## வடமாகாண...

ஜி.ஏ. சந்திரசிறி, வீடமைப்பு அமைச்சின் செயலர் விமலசிறி, தேசிய பௌதிக திட்டமிடல் திணைக்களப் பணிப்பாளர் ஜெயசேகர, வடக்கு மாகாண சபையின் செயலர் விஜயலட்சுமி உள்ளிட் டோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். வடக்கு மாகாண சபையின் பிரதம செயலர் தலைமையில் அமைக்கப் பட்டுள்ள 46 பேர் கொண்ட இந்தக் குழு, வடக்கு மாகாணத்துக்கான அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் நெடுஞ் சாலைகள் அபிவிருத்தி, சுகாதாரம், கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும், உட்கட்டமைப்பு வசதிகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டுள்ளது. கலாசாரம், சமூக வாழ்வியல், மற்றும் முக்கிய இடங்களைப் பாதுகாக்கும் வகையில், அபிவிருத்தி செயற்பாடுகள் குறித்து தொடர்ந்து கலந்துரையாடவும் இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது. தமது கருத்துகளை தெரிவிப்பதற்காகக் குறிப்பிட்ட பிரதேசங்களின் மக்கள் பிரதிநிதிகளை உள்ளடக்கிய உபகுழுக்களையும் இந்தக் குழு அமைக்கவுள்ளது.

## நெடுந்தீவு...

கட்சியின் ஊடகங்களுக்கான அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது,

இவ்வாறான விரும்பத்தகாத சம்பவங்கள் எங்கும், யாருக்கு எதிராகவும் நடைபெறக் கூடாது. தேர்தல் பிரசாரப் பணிகளில் ஈடுபடும் அனைவரும் சுதந்திரமாகவும், பொதுமக்களுக்கு இடையூறுகளை ஏற்படுத்தாமலும் செயற்பட வேண்டும்.

வடக்கு மாகாண சபை என்பது எமது அரசியல் போராட்டத்தின் வெற்றிகளில் முக்கியமான தருணமாகும். இது நாம் ஏற்படுத்திய ஜனநாயகப் பயணம் யாரும் போட்டியிடவும், எப்பகுதி மக்களையும் சந்திக்கவும் அனைவருக்கும் உரிமை உண்டு. அதைத் தடுக்கும் வகையில் எவரும் செயற்படக் கூடாது.

ஜனநாயக மீறலாகவும், தேர்தல் சட்டங்களுக்கு எதிராகவும் நடைபெறுகின்ற அனைத்துச் செயற்பாடுகளையும் நாம் கண்டிக்கின்றோம்.

தர்மம் தலை காக்கும் என்பது போல் நாம் செய்த சேவைகளும், எமது உண்மையான உழைப் பும் எமது கட்சியியின் அத்திவாரமாக தமிழ் மக்களின் மனங்களில் உள்ளது. நாம் எமது மக்களை நம்பி தேர்தல் பணிகளில் இறங்கியுள்ளோம். எமது வெற்றியே மாகாண சபை அதிகாரங்களை பாதுகாத்து பலப்படுத்த உதவும்.

நீதியும், சுதந்திரமுமான தேர்தல் வடக்கில் நடைபெறுவதை தேர்தலில் போட்டியிடும் அனைவரும் மனதில் நிறுத்திச் செயற்படுவதையே நாம் விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## திருமலையில்...

தானே சுட்டுத் தற்கொலை செய்துகொள்ள முற்பட்டார்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவரும் கிண்ணியா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்ட போது, பெண் மற்றும் ஆண் விமானப்படையினர் இருவரும் மரணமாகினர்.

தற்கொலைக்கு முயற்சித்த கோப்ரல் ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார். காதல் தொடர்பான பிரச்சினையாலேயே இந்த துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளதாக சநதேகிக்கப்படுவதாக, விமானப்படைப் பேச்சாளர் குறூப் கப்டன் அன்ரு விஜேசூரிய தெரிவித்துள்ளார்.

## நவிப்பிள்ளை...

யாழ்ப்பாணத்திற்கு மட்டும் செல்லாதீர். மாறாக இறுதிப்போர நடைபெற்ற வன்னிப் பகுதிக்கும் செல்லுங்கள். இலங்கையின் நிலைமை தொடர்பாக எந்தவொரு தகவலையும் எவருக்கும் ஒளிப்பதற்கு எந்தவித காரணங்களுமில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## அபிவிருத்தி...

பில் கலந்துகொண்டே அவர் இவ்வாறு தெரிவித்தார். இந்த ஊடகவியலாளர் மாநாட்டில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களும் கலந்துகொண்டனர்.

அங்கு அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வேட்பாளர்கள் எவரும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டால் அது குறித்து என க்கு அறிவித்தால் அவர்களு க்கு எதிராக நடவடிக்கை எடுக் கப்படும். நாங்கள் அமைதி யான தேர்தலை நடத்தவேண்டும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்களிடம் கேட்டிருக்கிறோம். அதன மூலம் தான் சிறந்த வெற்றியைப் பெறமுடியும். எமது நாட்டில் உள்ள எட்டு மாகாணங்களிலும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை தேர்தல் ஆணையாளரை கொழும்பில் சந்தித்து தேர்தலில் போட்டியிடும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. உட்பட்ட கட்சிகள் பாரதூரமான தேர்தல் வன்முறை எதுவும் இடம்பெற்றிருப்பதாக தேர்தல் ஆணையாளரிடம் முறையிடவில்லை.

தேர்தல் வன்முறைகள் நடை பெற்றால் நடவடிக்கை எடுப்பதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி நவரட்ண அரசினால் நியமிக்கப்பட்டுள்ளார். நடைபெறவுள்ள மூன்று மாகாண சபைகளுக்கான தேர்தலையும்விட வடக்கு மாகாணசபைத் தேர்தலே முக்கியத்துவம் பெறுகின்றது. அதற்கு வடக்கில் கடந்த 25 வருடங்களாக தேர்தல் நடத்தப்படாமல் தற்சமயம் நடைபெறவுள்ளமையே ஆகும்.

வலி. வடக்கில் 50 வீதமான மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்பட்டுவிட்டன. . மிகுதியானவை படிப்படியாக திட்டமிடப்பட்டு விடுவிக்கப்பட்டு வருகின்றன.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொள்வது போன்று பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் எதனையும் மக்கள் நலன்கருதி பெற்றுச் செயற்படுத்தவில்லை என்றும் குற்றம் சாட்டினார்.

இதேவேளை நேற்று முற்பகல் நாவாந்துறைப் பகுதிக்கு விஜயம் செய்த அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த அந்தப் பகுதிக்கான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மாகாண சபை வேட்பாளர் மௌலவி சுபியானின் தேர்தல்கால அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

# வடமாகாண சபைத் தேர்தலுக்கு போதியளவு நடவடிக்கை இல்லை

## சென்னையில் கூறுகிறார் ரணில்

வடமாகாண சபைத் தேர்தல் நல்ல முறையில் நடைபெற வேண்டும் என்பதே எம் அனைவரதும் விருப்பமாகும். எனினும் வடமாகாண சபைத் தேர்தலுக்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, புதுடில்லிக்கு செல்லும் வழியில் நேற்று சென்னை விமான நிலையத்தை சென்றடைந்துள்ளார். இதன்போது அங்கிருந்த ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், இலங்கை அரசாங்கத்தால் தமிழக மீனவர்கள் மாத்திரமின்றி அனைத்து இன மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் 2014 ஆம் ஆண்டில் இலங்கையில் பொதுத் தேர்தலொன்றை நடத்த வலியுறுத்தி பிரசாரம் மேற்கொள்ளப்படும். வடமாகாணசபைத் தேர்தல் நல்ல முறையில் நடக்கவேண்டும் என்பதே அனைவரது விருப்பமுமாகும்.

ஆனால், வடமாகாண சபைத் தேர்தலுக்கு போதுமான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார் என இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

# குழந்தைகளுக்கான பால்மா இன்று தீர்மானம் கிடைக்கும்

(கொழும்பு)

சந்தையில் விற்பனை செய்யப்பட்டுவரும் குழந்தைகளுக்கான பால்மா தொடர்பில் இன்றைய தினம் தீர்மானம் ஒன்று எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கென உணவு ஆலோசனைக்குழு இன்று கூடவுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

குழந்தைகளுக்கான பால்மாவில் க்ளோஸ்ட்ரிடியம் பொட்டலினம் என்ற பக்ரீரியா உள்ளதா என ஆராய பொரளை வைத்திய பரிசோதனை நிறுவனம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி குழந்தைகளுக்கான பால்மா வகைகள் சிலவற்றை சந்தையில் இருந்து நீக்க சுகாதார அமைச்சு அண்மையில் நடவடிக்கை எடுத்தது.

பொரளை வைத்திய பரிசோதனை நிறுவனம் இதுவரை இரண்டு ஆய்வு அறிக்கைகளை சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ள நிலையில் இன்றைய தினமும் அறிக்கை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த அறிக்கைகள் கிடைத்தபின் சந்தையில் குழந்தைகளுக்கான பால்மா தட்டுப்பாடு ஏற்படாத வண்ணம் நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 122 ஆக அதிகரித்தது தேர்தல் வன்முறைகள்

(கொழும்பு)

மாகாண சபைத் தேர்தல்களோடு சம்பந்தப்பட்ட 122 முறைப்பாடுகள் தமக்குக் கிடைத்திருப்பதாக கபே என்று அழைக்கப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலுக்கான மக்கள் இயக்கம் அறிவித்துள்ளது.

"கபே" அமைப்பிடம் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை மத்திய மாகாணம் மற்றும் வடமேல் மாகாணங்களில் இருந்து கிடைக்கப்பெற்றிருப்பதாக கபேயின் பணிப்பாளர் கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

தேர்தல் தொடர்பான அதிகப்படியான முறைப்பாடுகள் ஐக்கிய தேசியக் கட்சியினரால் முறையிடப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மொத்தமாகக் கிடைக்கப் பெற்றுள்ள தேர்தல் தொடர்பான 122 முறைப்பாடுகளிலும் 115 முறைப்பாடுகள் தேர்தல் சட்ட விதிமுறைகளை மீறியமை தொடர்பானதாகவும் ஏழு முறைப்பாடுகள் ஆட்களை காயப்படுத்தியமை தொடர்பானது எனவும் அவர் தெரிவித்தார்.

# நிதிக்குற்றச்செயல்களில் சீன, தாய்வான் நாட்டவர்

(கொழும்பு)

சீனக் குற்றவாளிகளின் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு, பொலிஸ் துறையை எச்சரித்துள்ளது.

நிதி தொடர்பான குற்றச் செயல்களில் வெளிநாட்டவர்கள் ஈடுபடுவது அதிகரித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் சீனர்களும், தாய்வானையும் சேர்ந்தவர்களென பொலிஸ் தெரிவித்துள்ளது.

2010 ஜனவரி தொடக்கம், 2013 யூலை 5 ஆம் திகதி வரையான காலப் பகுதியில், இலங்கையில் நிதி தொடர்பான குற்றங்களில் ஈடுபட்ட 136 வெளிநாட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் 105 பேர் சீனா மற்றும் தாய்வானைச் சேர்ந்தவர் களாவர். ஏழு பேர் இந்தியாவையும், 5 பேர் ரஸ்யாவையும், ருமேனியா, உக்ரேன், மொசாம்பிக் நாடுகளைச் சேர்ந்த தலா 4 பேரும், கமரூனைச் சேர்ந்த 2 பேரும், உகண்டா, இத்தாலி, மாலி, நைஜீரியா, சியராலியோன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த தலா ஒருவரும் இந்தக் காலப் பகுதியில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# இரதோற்சவம்

(யாழ்.நிருபர்)

மண்டைதீவு - திருவெண்காடு திருவருள் மிகு சித்தி விநாயகர் தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

இன்று காலை 7 மணிக்கு நடைபெறும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து இரதோற்சவம் இடம்பெறும்.

நல்லூர் பாலமுருகன் குழுவினர், இணுவில் கோவிந்தசாமி புதல்வர் மாக்கையா குழுவினர், ஆனைக்கோட்டை வசந்தன் குழுவினர் இணைந்து வழங்கும் நாதஸ்வர தவில் கச்சேரியும் இடம்பெறும். (10)

# கண்காட்சி இரத்து

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்றும், நாளையும் நடைபெறவிருந்த 'உருக்களின் உலகம்' கல்விக் கண்காட்சி தவிர்க்கமுடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாது என நூலக விழிப்புணர்வு நிறுவனம் அறிவித்துள்ளது. கண்காட்சி இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

# விரிவுரையாளர் குறித்துப்பேச இராணுவத்திற்கு உரிமையில்லை

## கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவிப்பு

(கொழும்பு)

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொடர்பில் கருத்துத் வெளியிட இராணுவத்திற்கு எவ்வித உரிமையுமில்லையென பல்கலை விரிவுரையாளர் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி நிர்மால் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சிலர் லண்டனில் புலிகளின் மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளச் சென்றுள்ளதாகவும் பிரிவினைவாதம் மற்றும் அரசுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டார்கள் என்ற அடிப்படையில் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வாய்ப்பிருப்பதாக ஜெனரல் ஜகத் ஜயசூரிய, மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஷானிகா ஹிரிபுரேகம, பிரதியமைச்சர் நந்திமித்ர ஏக்நாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

இவர்களின் இந்தக் கருத்துக்கள் பல்கலைக்கழகத்தை இராணுவமயப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு கட்டமாகும். இது மிகவும் பயங்கரமான செயற்பாடாகும். இராணுவம் ஒரு புறம் இந்த விடயம் தொடர்பில் கருத்து வெளியிடுகிறது.

இந்த நிலையில், கருத்துச் சுதந்திரம் பற்றிய எவ்வித அறிவுமின்றி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் இது தொடர்பில் கருதுக்களை வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் பல்கலைக் கழக விரிவுரையாளர்களுக்கு விமர்சனங்கள் மற்றும் விபரங்களுடனான கருத்துக்களை வெளியிட சந்தர்ப்பம் கிடைக்காது என்பதையே இது காட்டுகிறது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் வெளிநாடுகளுக்கு செல்லும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் இருக்கின்றன. அது பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவின் பணியாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நீச்சல் தடாகத்தில் மூழ்கி இலங்கை பிரஜை இத்தாலியில் பலி

இத்தாலியின் பியேன்ஸ் நகரில் உள்ள தனது வீட்டில் இருக்கும் நீச்சல் தடாகம் ஒன்றில் இலங்கை பிரஜை ஒருவர் உயிரிழந்துள்ளதாக இத்தாலிப் பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பு பிட்டகோட்டே பகுதியை சேர்ந்த 47 வயதான டப்ளியூ.பீ.உபுல் இந்திரஜித் என்பவரே உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை இவர் வீட்டில் உள்ள நீச்சல் குளத்தை துப்புரவு செய்யப் போவதாகக் கூறிவிட்டு, சென்றுள்ளார்.

அவர் மீண்டும் வீடு திரும்பாத நிலையில், நீச்சல் குளத்திற்குச் சென்று உறவினர்கள் பார்த்த போது, அவர் இறந்து கிடந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் கடந்த 18 ஆண்டுகளாக தனது குடும்பத்தினருடன் இத்தாலியில் வசித்து வந்துள்ளார்.

தற்போது மரண விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. எதிர்வரும் வெள்ளிக்கிழமை சடலம் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளது.

# கொழும்பு மாநகர ஆவணங்கள் பொரளை மயானத்தில் தீக்கிரை



(கொழும்பு)

கொழும்பு மாநகரசபையில் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த முக்கிய ஆவணங்கள், பொரளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தீக்கிரையாக்கப்பட்ட சம்பவமொன்று நேற்று முன்தினம் மாலை 5.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாகத் தகவலறிந்த மாநகரசபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர், மயானத்துக்கு விரைந்து தீக்கிரையாக்கப்பட்ட ஆவணங்களில் சிலவற்றை மீட்டு வந்துள்ளனர்.

2007 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட முக்கிய ஆவணங்களே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கொழும்பு மாநகரசபையிலிருந்து திருடப்பட்டுள்ள இந்த ஆவணங்கள், அங்கிருந்து பொரளை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டே இவ்வாறு தீக்கிரையாக்கப்பட்டுள்ளன என்று மாநகர சபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவரே இந்த ஆவணங்கள் தீக்கிரை சம்பவத்துடன் தொடர்புடையவர் என மேற்படி மாநகரசபையின் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க் கட்சி உறுப்பினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.